உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

தொகுதி-௩௬.] வெகுதானிய ௵ மார்கழி ௴ [பகுதி-௨.
Vol. 36. December 1938—January 1939. No. 2.

வான்மீகரும் தமிழும்.

I. ஒரு தனிச்செய்யுள்.

வான்மீகிமுனிவர் வடமொழியில் ஆதிகாவியமான இராமாயணமியற்றியவர் என்பதும் இவருடைய காவியநயங்களைக் கண்டு கொண்டாடாத பண்டிதர்களில்லை என்பதும் இவரது காவியநடையைப் பின்பற்றியே வடமொழியிற் பற்பல காவியங்கள் உண்டாயின என்பதும் ஐதிகம்.

இவர் இத்தகைய சிறந்த காவியமியற்றுதற்குமுன் வடமொழியில் வேதங்களும் சாஸ்திரங்களும் இருந்தன; ஆனால் அவை இன்பம்பயக்கும் காவியநடையைக் கற்பிக்கத்தக்கனவல்ல; மக்கள் அறியவேண்டும் உண்மைப்பொருள்களையே யுணர்த்துவன. ஆதலால் இவர் இத்தகைய காவியமியற்றும் ஆற்றல் படைத்ததற்குக் காரணம் வேறிருக்கவேண்டும். அது, இவரது தவமகிமையும் நாரதபகவா னுபதேசமும் பிருஹ்மாவின் அநுக்கிரகமும் என்பர். அவை ஒருபுறமிருந்தாலும், சரித்திரவாராய்ச்சியாளர்கண்கொண்டு நோக்குவார்க்கு இவர் இராமாயண மியற்றுதற்குமுன் சிறந்த காவியங்களமைந்த வேறுபாஷையிற் பயிற்சியுடையராயிருந்து அதிலுள்ள சிறந்த கவிநயங்களையெல்லாம் தெரிந்துகொண்டவராயிருக்கவேண்டுமென்பது தோன்றாதிராது.

*

இவர்காலம், அகத்தியர் தொல்காப்பியர் முதலிய சங்கமருவிய சான்றோர்களும் பாடல்சான்ற பல பனுவல்களும் தமிழ்நாட்டிற் பரவியிருந்த காலம் என்பதும், இவர்க்குத் தமிழ்நாட்டில் மிகப் பயிற்சியுண்டென்பதும் ஆராய்ச்சியாளர் துணிபு.

இதனைச் செந்தமிழ்த்தொகுதி 7-ல் (பகுதி ௩-ல் பக்கம் ககசூமுதல் க௩உவரை) அதன் பத்திராசிரியராயிருந்து இப்போது தமிழ்லெக்ஸிகன் ஆபீஸ் தலைமைத்தமிழ்ப்பண்டிதராயிருக்கும் ஸ்ரீமான் மு. இராகவையங்காரவர்கள் எழுதி வெளியிட்ட ஸ்ரீவான் மீகரும் தென்னாடும் என்னும் ஆராய்ச்சியுரையாலும் அறியலாம்.

இவர்காலத்திலிருந்த சங்கமருவிய சான்றோர்களால் பாடப் பட்ட சில செய்யுட்களையுமுடையது புறநானூறு. அதில் ஒரு பாட்டுப் பாடியவர்பெயர் வான்மீகியார் என்றும் வான்மீகையார் என்றும் எழுதப்பட்டிருக்கிறது. அவ்விரண்டுபெயரும் வால்மீகி என்னும் வடமொழிப்பெயரின் திரிபாகக் காணப்படுகின்றன.

வால்மீகி என்னும் அப்பெயருடையவர் தவத்தால் பெரியர் என்று ஐதிகம் சொல்லுகிறார்கள். இவர் தாமேயும் தம் தவப்பெருமைதோன்ற "வாஸ்மீகிஹ்ர்மஹாநுஜோஷிஃ" என்று கூறியிருக்கிறார். அன்றியும், இவர் தம் ஆசிரியரான நாரதபகவானைக் கூறுமிடத்தும் "தவஸ்ஸாத்யாய நிரதம்" என்று தவத்தை முதன்மையாகச்சொல்லிச் சிறப்பித்திருக்கிறார். இவற்றால் இவர்க்குத் தவவொழுக்கத்தில் மிக்க அநுபவமும் அபிமானமும் உண்டென்று தோன்றுகிறது.

புறநானூற்றிலுள்ள வான்மீகியார்பாட்டும், தவத்தை வியந்து கூறுகிறது. அது செஞ்சொற்றொடர்களால் செவிக்கின்பம் பயப்பதாய் ஆழமுள்ளதாய் அகன்று விரிந்த பொருளுடையதாய் வேதாந்தமுடிவானபொருள்களை வெளியிடுவதாய் வான்மீகி முனிவரியற்றிய இராமாயணவாக்கோடு ஒத்துவிளங்குகிறது. அது, உரையில்லாத பகுதியிலுள்ளது. ஆயினும், அறிஞர்களது ஆராய்ச்சிக்கு உதவுமென்றெண்ணி அப்பாட்டும் உரையும் இங்கு வரையப்பெறும். அப் பாட்டு,

பருதி சூழ்ந்தவிப் பயன்கெழு மாநிலம்
ஒருபகல் எழுவர் எய்தி யற்றே
வையமுந் தவமுந் தூக்கிற் றவத்துக்கு
ஐயவி யனைத்து மாற்ற தாகலிற்
கைவிட் டனரே காதலர் அதனால்
விட்டோரை விடாஅள் திருவே
விடாஅ தோரிவள் விடப்பட் டோரே. (கருஅ)

என்பது.

இதன்பொருள்:—"இருளைத் துரத்துங் கதிரவனாற் சூழப்பெற்ற தாயும், உலகியலான பொருளும் இன்பமுமாகிய பயன்களால் விளங்குவதாயும் உள்ள இப் பெரிய நிலமடந்தையை அரசர் தமக்கு உரிமையாக எய்தி வாழ்ந்துவருகின்ற அவ்வாழ்க்கை எத்தகைய தென்றால், ஒருதினப்பொழுதைப் பலகூறுசெய்து இரவி முதலிய எழுவரும் ஒவ்வொருவர் ஒவ்வொருகூறுகொண்டு ஒருவர்பின்னொருவ ராய் உறவும் பகையும் உச்சமும் நீசமுமான நிலைவேறுபாடுகளை யடைந்து ஒருசிலர் பாபரும் ஒருசிலர் சுபரும் ஒருசிலர் சிறியரும் ஒருசிலர் பெரியருமாய் மாறிமாறி ஓரைநாயகராய் உரிமையெய்தி யொழிவதுபோலும் நிலையில்லாத பல வேறுபாடுடைய சின்னாட் பல் குறைச் சிறுவாழ்க்கையேயாம். மற்று நிலையான குறையற்ற பெரு வாழ்க்கை யாதோவென்னில், அது தவப்பயனுயுள்ளது. அத் தவப்பயனின் பெருமையை அறியவேண்டின் இவ்வையத்தின் வாழ்வை ஒரு தட்டிலும் தவப்பயனான பரலோகப் பெருவாழ்வை ஒரு தட்டிலும் வைத்துச் சீர்தூக்கிப்பார்த்தால் தவப்பயனாகிய வாழ்விற்கு வையத்தின் வாழ்வு ஒரு சிறுவெண்கடுகினளவும் ஆற்றாது நொய் தாகும். ஆதலால் நிலமடந்தையைக் காதலித்திருந்த முடிமன்னர்பலர் அவளைக் கைவிட்டுத் துறவுபூண்டனர். இங்ஙனம் இந்நிலமடந்தை யைக் கைவிட்டோரைத் திருமகளாகிய தாய் வீடாதுபற்றி வாயிலாய் நின்று.* இறைவனிடம்வேண்டி, அவர் முன்செய்துபோந்த பிழை களைப்பொறுப்பித்து, நித்தியநிரதிசயப்பேரின்பத் தாராவமுதூட்டி வாழ்வியாநிற்பள். இவ்வுலகவாழ்க்கையைப் பற்றிக்கொண்டு அத னைக் கைவிடாதுநிற்பவர் திருமகளால் கைவிடப்பட்டவராய்ப் பிறவித் துன்பத்துக்குள்ளாயிருப்பர்" என்பதாம்.

* 'வீடியல் வழிய தாக்கும் வேரியங் கமலை' என்றார் பிறரும்.

இதனுள், பதப்பொருள்களொழிந்தவை சொற்குறிப்புப் பொருட்குறிப்புக்களாலும், இசையெச்சத்தாலும், பொருளாற்றலாலும் வருவித்துரைக்கப்பட்டன. இப்பாட்டின் பொருள்முழுதும், ஈண்டு ஒருங்குரைக்கமுடியாமையால் ஒருவாறு சிறிதளவே தொகுத்துரைக்கப்பட்டது; இதன்பின்வரும் குறிப்புரையுள் சிறிது விரிக்கப்படும்.

இனி, இதன் குறிப்புரை வருமாறு:—

'பருதிசூழ்ந்த..............மாநிலம்' என்றது (இந்நிலவுலகை ஆள்வோர்கருத்துப்பற்றி அவரது ஆசைப்பெருக்கத்துக் கிசைய) அகண்ட பூமண்டலத்தையும் என்பதுபடநின்றது.

இதற்குக் கவியின்கருத்து வேறு. அது பேரொளியுடைய கதிரவன் நாள்தோறும் சூழ்ந்துசூழ்ந்து போக்கிப்போக்கிச் செல்லவும் போகாது பின்தொடர்ந்துவந்துமூடும் பேரிருளையுடைய...... உலகம் என்பதாம். இது பொருட்குறிப்பு என்னும் தொனிப்பொருளாகக் கொள்ளத்தக்கது. இத்தொனிப்பொருளினின்றும் பிறிதொரு தொனிப்பொருள் தோன்றுகிறது. அது, அஞ்ஞானவிருளால் மூடப்பட்ட உலகம் என்பதாம்.

இதனாற் போந்தபொருள்: அஞ்ஞானமடியாகத் தோன்றும் யான் ' எனது என்னும் செருக்கினால் பழிபாவங்களையஞ்சாது பொருளையீட்டிக் காமபரவசராய்த் துன்பமிடைந்த சுகாபாசபோகந்துய்த்துப் பிறப்பிறப்பிற் சுழன்றுதிரிதற்கு இடமான உலகம் என்பதாம்.

அஞ்ஞானத்தை இருளாகவும் அதனைப் போக்குதற்கு உதிக்கும் அவதாரபுருஷர்களைக் கதிரவனாகவும் கொள்ளும்படி சொல்லியிருப்பது குறிப்பால்வந்த உருவகவிசேடம்.

இக்கருத்துக்கொண்டே,

"இருள்தருமா ஞாலத்தே இன்பமுற்று வாழும்,
தெருள்தருமா தேசிகனைச் சேர்ந்து" என்றும்,

"ஆதித்ய ராமதிவாகர அச்சுதபாநுக்களுக்குப் போகாத உள்ளிருள் (போனது)........வகுளபூஷண பாஸ்கரோதயத்திலே" என்றும்

பெரியோர்களும் பணிப்பர்.

இவற்றுள்ளும் அஞ்ஞானத்தை இருளாகவும் அதனைப் போக்குதற்கு உதிக்கும் அவதாரபுருஷர்களை ஆதித்தியர்களாக வும் கூறியிருப்பது காண்க.

இதனால் போந்தபொருள்: ஞானபாநுக்களான அவதார புருஷர்கள் அப்போதப்போது தோன்றிப் போக்கியும் போகாது தோன்றிக்கொண்டுவரும் அஞ்ஞானவிருளையுடையது இவ்வுலகம் என்பதாயிற்று.

இங்கு, பேரொளியுடைய பருதிசூழ்தலைக்கொண்டு உலகில் பேரிருளுடைமை தோன்றுமாறு காட்டியிருப்பது ஆச்சரியமான தொரு முரணணியாயிற்று. மேலும், அடிதோறும் முரணணி படத் தொடுத்திருத்தலை ஆராய்ந்தறிந்துகொள்க.

பருதிசூழ்ந்த இம்மாநிலம் என்று சுட்டினமையால் 'நஸூர்யோ-பாதி' 'நசந்த்ரமா:' (நஸூர்யோபாதி, நசந்த்ரமா:) என்றற் றொடக்கத்து வேதவாக்கியங்களாற் சொல்லப்பட்டபடியே இரவி முதலிய சுடரொளிவேண்டாது ஸ்வயம்ஜோதிமயமாயும் ஞானமய மாயுமுள்ள பரலோகம் ஒன்றுண்டென்பதை மறுதலைக்குறிப்பால் நினைப்பித்ததாயிற்று.

நிலம் என்றது நிலவுலகவாழ்க்கைக்கு ஆகுபெயராயிற்று. மாநிலத்தை யென்னும் இரண்டாம்வேற்றுமை தொக்கு மாநிலம் என நின்றது.

மாநிலம் ஆள்வாரைப் பின் காதலர் எனக் கூறுதலால் மாநிலத் தை ஒரு மடந்தையாக உருவகஞ்செய்ததாயிற்று. இதனால், பயன் கெழுமாநிலம் என்றது அகப்பொருட்பயன் கெழுவிய மாநிலம் என்க. இதன் மறுதலைக்குறிப்பு, பேரின்பப்பெருவாழ்வுள்ளநிலம் பரலோ கம் என்பதாம். மாநிலம் என்றது பெத்தசேதநராகிய மாக்கள் வாழும் நிலம் என்றவாறு. இதன் மறுதலைக்குறிப்பு, முக்தசேத னர் வாழ்க்கைக்குரிய நிலைபெற்ற பேருலகம் பரலோகம் என்ப தாம். பின் 'ஒருபகல் எழுவர் எய்தியற்றே' என்ற வினையுவமை யால் மாநிலத்தை முடிமன்னர் எய்துதல் எனப் பொருளிடத்தும் அவ்வினை போந்துநின்றது. எழுவர் என்ற உவமத்தின் வினைமுதற் கேற்பத் தகுதிநோக்கிப் பொருளிடத்து முடிமன்னர் என்னும் வினைமுதல் வருவிக்கப்பட்டது.

பருதிசூழ்ந்த இப் பயன்கெழுமாநிலத்தை முடிமன்னர் எய்து தல் ஒரு பகல் எழுவர் எய்தியற்று எனக் கூட்டிமுடிக்க.

'ஒருபகல்' என்றது ஒரு தினப்பொழுதை என்றவாறு. இது சினையாகுபெயர். எழுவர் என்றது தொகைக்குறிப்புப்பெயராய் ஈண்டுத் தினந்தோறும் ஹோராநாயகராக மாறிமாறிவரும் இரவி முதலிய கோள்கள் எழுவரையு முணர்த்துகிறது. அவர் அங்ஙனம் மாறிமாறி வருதலைப் பின்வரும் செய்யுளானும் அறிக. அது,

அருக்கன் புகர்புந்தி இந்துவுன் மந்தனொ டந்தணன்சேய்
இருக்குங் கடிகை இரண்டரை யாமவை யெய்திடிலோ
மரிக்கும் மணஞ்செயும் மாலையுஞ் சூட்டும் மகிழ்ந்திருக்கும்
சிரிக்குஞ் சிறையிடும் செல்வமுண் டாமெனத் தேர்ந்துகொள்ளே.

என்பது.

இதுகாறும் கூறியவாற்றால் அகப்பொருட்பயனில் உவர்ப்பும் இவ்வுலகவாழ்க்கையின் அஸ்வல்பூரகவமான சிறுமையும் நிலையாமை யும் குறிப்பாற் கூறியவாறாயிற்று.

இனி, இதனினும் பெரியதும் நிலையுடையதும் யாதென வினா வெழுமன்றே? அவ்வினாவிற்கு விடையாகக் குறிப்பாற்காட்டிய பரலோகவாழ்க்கைதனையே கூற்றால் அளந்துகாட்டுகிறார்,

'வையமும் தவமும் தூக்கில் தவத்துக்கு
ஐயவி யனைத்தும் ஆற்றது' என்று.

வையம் - இவ்வுலகம். இது இவ்வுலகவாழ்க்கையான சிற் றின்பத்துக்கு ஆகுபெயர். தவம் - தவப்பயனாகிய பேரின்பத்துக்கு ஆகுபெயர். இதனால் பேரின்பவாழ்விற்கு உபாயம் தவம் என்ப தும் உடன்கூறினாராயிற்று. தூக்கின் என்றது வேதாந்த நூல்க ளால் ஆராயுமிடத்தில் என்றவாறு. இதனால் சிரவண மனனம் சொல்லப்பட்டது; கல்வியிற்பிரிவும் காட்டியதாயிற்று. தவத்துக்கு- தவப்பயனாகிய பேரின்பவாழ்க்கைக்கு. ஐயவி - சிறுவெண்கடுகு. அது இங்கு 'இம்மி' என்னும் அளவுபோலும் மிகச்சிறிய பின்னம்ச மான அளவையுணர்த்துகிறது. உலகம் ஐயவியனைத்தும் ஆற் றாது என எழுவாய் வருவித்து முடிக்க. உலகின் சிறுமை யளவிற்கு ஐயவியை உறழ்பொருவாகக் காட்டித் தவத்தின் பெருமைக்கு எடையொன்றும் காட்டாமையால் அது அளவிறந்த தென்பதாம்.

வேதம், இவ்வுலகவாழ்க்கையில் ஒன்றானும் குறையில்லா துயர்ந்ததொரு காமவின்பத்தை ஒன்று என்னும் எண்ணுகவைத்து அவ்வின்பத்தைக்கொண்டு பேரின்பத்தை அளந்துகாட்டத் தொடங்கி நூற்றானுறழ்ந்துறழ்ந் தடுக்கடுக்காயடுக்கி அளந்தும் அளக்கமுடியாதென்று கைவிட்டது. அந்தகைய பேரின்பத்தைக் கொண்டு இதனுள் சிற்றின்பத்தையளந்து பேரின்பத்தின்பெருமை தோன்றச்செய்திருப்பது வியப்பு.

ஆற்றாதாகலின் என்றது ஞாபகவேதுவாய் ஆற்றாதென்றறித லால் என்னும் தெளிதற்பொருள்பயப்பதாயிற்று.

காதலர் கைவிட்டனர் என மாறுக. காதலர் என்றது இறந்த காலவினைக்குறிப்புப்பெயராய் முன்பு காதலராயிருந்தவர் என்னும் பொருள்பயப்பதாய் அகப்பொருட்பயனெய்திநின்றமையை நினைப் பித்துப் பெருந்திணையொழுக்கங்காட்டியவாறு. கைவிட்டனர் என்றது பற்றறத்துறந்தார் எனப் புறத்திணையான துறவுகூறிய வாறு.

காதலர் கைவிட்டனர் என நேரே கூறாது, கைவிட்டனரே காதலர் என மாறிக்கூறிய ஓசைநயத்தால், புதல்வர்ப்பயந்த பின்றைக் காமமுதலியகடிந்து தவஞ்செய்யக்கடவதென்னும் கடவு ளாணையைக் கடந்து காமபரவசராயிருந்தோர் ஒருவாறு தேறி அப் பற்றை விட்டனர் என்னும் குறிப்புணர்த்திக்கொண்டு அதன் விட லருமைகுறித்துநின்றது. இது வந்தாரையாவழிக்கு என்னும் உலகவழக்கின் குறிப்புப்போல்வதொரு குறிப்பு.

காதலர் கைவிட்டனர் என அநுபவங்காட்டியவாறு. முடி மன்னர் கைவிடுதல் கூறவே ஏனையோர் கைவிடுதல் கூறவேண்டா தாயிற்று.

'அதனால்' என்றது காமப்பற்றுவிட்டமையால் என்பதாம். இது திருமகள் விடாதுபற்றுதற்கு ஏதுவாயிற்று. இதனால் வீடடையவேண்டுவோர், பற்றுவிடுதற்கு முயலவேண்டுமல்லது வீடடைதற்கு முயலவேண்டாவென்பதாம். இதுபற்றியே, 'பற்றற்றகண்ணே பிறப்பறுக்கும்' என்றும் 'அற்றது பற்றெனி லுற்றது வீடு' என்றும் கூறுவாராயினர்.

'விட்டாரை' - காமப்பற்றுவிட்டவரை. 'திரு' என்றது பரம புருஷனுடைய கருணாரூபியும் தேவியுமான திருமகளை. எங்கும் நிறைந்தவனுய்க் காமப்பற்றுவிடுவாரை எதிர்பார்த்திருக்கும் திருமாலின் நெஞ்சிற்கமலத்துறைபவளாதலால் 'விடாள்' என்றார்; விட்டார், கடவுளின் கருணைக்கிலக்காதல் ஒருதலை என்பதாம்.

'விடாதோர்' என்றது காமப்பற்றுவிடாதோரைச் சுட்டிநின்றது. 'இவள்விடப்பட்டோர்' என்றது கருணைக்கிலக்காகாதவராய்ப் பிறவித்துன்பமடைவர் என்பதாம். 'அருளில்லார்க் கவ்வுலக மில்லை' என்பது பொய்யாமொழி.

விட்டோரை விடாள், விடாதோ ரிவள்விடப்பட்டோர்: என உடன்பாட்டானும் எதிர்மறையானும் தவப்பயனாகியபொருளை வலியுறுத்தியிருப்பதும், சொல்லும் பொருளும் முரணத்தொடுத்திருப்பதும் வியக்கத்தக்கன.

இன்னும் பலகுறிப்புக்களும் நயங்களும் இச்செய்யுளுள் அமைந்துள்ளன. அவையெல்லாம் கூறில் மிகவிரியுமென்றெண்ணி விடப்பட்டன.

ஈண்டுக் காட்டியவற்றோடு மற்றுமுள்ள பலவகை நயங்களையும் நோக்குங்கால் இச்செய்யுளியற்றியவர் சாதாரணமான தமிழ்ப்புலவரில்லையென்றும் வேதவேதாந்தமுதலிய சாஸ்திரங்களிலும் பயிற்சியுடையவரென்றும் வான்மீகிமுனிவர்வாக்குப்போலும் காவிய நயங்களமைந்த வாக்குடையவரென்றும் அறியலாம்.

மேலும், இதனுள்,

"விட்டாரை விடாஅள் திருவே
விடாஅதோரிவள் விடப்பட்டோரே"

என உடன்பாட்டானும் எதிர்மறையானும் கூறியிருக்கும் இப்பொருளை,

'இவள் சந்நிதியாலே காகம் தலைபெற்றது;
அஃதில்லாமையாலே ராவணன்முடிந்தான்'

என்று ரஹஸ்யத்திரயஜால் இராமாயணத்திலிருந்து வெளியிட்டிருக்கிறது. இதனையும் வான்மீகிமுனிவர்கருத்தை ஒத்திருக்கிறது.

இன்னும் வீடளிக்கும் பரம்பொருள் திருமாலாயிருக்கச் செய்தே 'விட்டாரைவிடாஅன் மாலே, விடாஅதோ ரிவன் விடப்பட்டோரே' என நேரே கூறாது, திருமகளை வாயிலாகக்கொண்டு 'விட்டாரை விடாஅள் திருவே, விடாஅதோ ரிவள் விடப்பட்டோரே' என்று இக்கவி கூறுதலால் இவர்க்குத் திருமாலினும் திருமகளிடத்து மிக்க ஆர்வமுண்டென்று தோன்றுகிறது.

இக்கொள்கை வான்மீகிமுனிவருக்குமுள்ளதென்பதை, முதன்முதல் அவர் பாடத்தொடங்கும்பொழுதே ராமசரித்திரச் சுருக்கமாயமைந்த செய்யுளில் "மாநிஷாத" ('மாநிஷாத') என்று முதலில் மா என்னும் திருமகளைப்பற்றிக்கொண்டே திருமாலை அழைக்கின்றார் என்பதுகொண் டறியலாம். அன்றியும், "காவ்யம் ராமாயணம் க்ருத்ஸ்நம் ஸீதாயாஶ்சரிதம்மஹத்" என்பதனால் 'மஹா காவியமான ராமாயணமுழுதும் சீதையின்சரித்திரமாயுள்ளது' என இராமபிரானிலும் சீதை பெருமையுடையள் என்று பாராட்டியிருக்கின்றார். இதனாலும் ஒன்றுபட்டகருத்துடைமை தோன்றுகிறது.

வான்மீகிகருத்தையறிந்த லோகதேசிகனும், 'ராமாயணந்தால் சிறையிருந்தவளேற்றம் சொல்லுகிறது' என்று ராமாயணத்தின் பொருள்முடிவுகூறுகிறார். [இங்குச் சிறையிருந்தவள் என்றது தேவர்களைச் சிறைவிடுவிக்கைக்காகத் தான் ராவணன்கோட்டையில் சிறைப்பட்டிருந்த சீதை என்பதாம்.]

வான்மீகியார்பாடியதென்றுகாணப்படும் இப்புறநானூற்றுப் பாட்டுப் பாடினார்கருத்துக்களையும் பாட்டின் சொன்னயம் பொருணயமுதலியவற்றையும் உற்றுநோக்குவார்க்கு இது வான்மீகி முனிவர்வாக்குத்தானோ வென்ற சந்தேகமுண்டாகலாம். அதனைத் தெளிதற்கு அவர்க்குத் தமிழ்ப்பயிற்சியுண்டாவென்பதை ஆராய வேண்டும்.

பத்திராசிரியர்.

தா(யா)ராநகரவேந்தன் போஜதேவன் இயற்றிய

ஸரஸ்வதீகண்டாபரணம்.

(கலைமகள் கழுத்தணி).

முகவுரை.

காப்பியம் இயற்றுவதைப்பற்றிப் பற்பல விதிகளை விளக்கியுரைக்கும்நூலே ஸாஹித்தியசாஸ்திர மெனப் பெரியோர்களால் கூறப்படுகிறது. ஒரு விஷயத்தைப்பற்றிச் சொல்லும்போது மக்கள் தாங்கள் தாங்கள் விரும்பியவாறு கூறாமல் ஒழுங்குக்குக் கட்டுப்பட்டுக் கூறவேண்டுமென்று அவ்வவ்விஷயத்துக்கேற்பட்ட சாத்திரநூல் வற்புறுத்துகிறது. சாத்திரமென்பது யாவருக்கும் கண்போன்றது. சாத்திரங்களில் சாகித்தியசாத்திரம் மிகச்சிறந்தது. ஏனெனில், நற்காப்பியங்களை ஆக்குவோன் புகழையும் இன்பத்தையும் அடைகிறான். அவைகளைப் படிப்போர்கள் எளிதில் நன்மை தீமைகளைத் தெரிந்துகொண்டு, தீச்செயல்களை விலக்கி, அறம் முதலிய நான்கு உறுதிப்பொருள்களையும் அடைகிறார்கள். நல்வழியெதுவெனத் தெரிந்துகொண்டு, இம்மை மறுமைப்பயன்களை எளிதிற் பெற விரும்புவோர்கள் காப்பியங்களை அவசியம் படித்தல்வேண்டும்.

இதத்துடன்கூடியதும் யாவர்க்கும் நன்மைசெய்வதுமான சாத்திரமே ஸாஹித்தியசாத்திரமெனப்படும். (ஹிதேந ஸஹ வர்த்ததே=இதத்துடன் கூடியிருப்பது=ஸஹிதம்; அதன்தன்மை ஸாஹித்யம்.)

காதால் கேட்டுத் தெரிந்துகொள்ளப்படுவனவும், கண்ணால் உணரப்படுவனவுமான காப்பியங்களின் இலக்கணத்தை நன்கு அறிவித்தலே ஸாகித்தியசாத்திரத்தின் நோக்கமாம்.

அலங்காரசாத்திரமென்பது சொல்லணி பொருளணிகளைப் பற்றி முக்கியமாய்க் கூறுவதாயினும், (ஸௌந்தர்யமலங்கார꞉; அலங்க்ருதிரலங்கார꞉) அலங்காரமென்பது அழகாயிருப்பது என்று பொருள்கொள்ளலால், அழகுமிகுந்த நற்காப்பியங்களின் இலக்கணத்தைக்கூறும் நூலுக்கே அது பெயராக அமைந்தது.

அலங்கார நூல்களை ஆக்கியோர்களில் பாமஹர் (பாமஹ꞉) முதலியவர்களும், பின்னவர்களான 'மம்மடபட்டர்' முதலானவர்களும் பற்பல நூல்களை இயற்றியுள்ளார்கள். அவர்களில் போஜராசர் பாமகரை அனுசரித்தவர். இவர் மாளவதேயத்தில் தாரா நகரமென்ற (தாரா) ராஜதானியில், கி. பி. 1010 முதல் 1055 வரை அரசுபுரிந்தவராயும், தாமே பண்டிதராயும் கவிவாணர்களை ஆதரித்துச் சன்மானஞ் செய்பவராயும் விளங்கினர் என்பது "ராஜதரங்கிணி" என்ற சரித்திரநூலினாலும், பல கல்வெட்டுச் சாஸனங்களாலும், அவ்வரசரால் அந்தணர்க்குப் பூமிதானம் செய்ததைக் குறிக்கிற தாமிரசாஸனத்தாலும் அறியக்கிடக்கிறது.

இவர் சோதிடம், வைத்தியம், தர்மசாஸ்திரம், வேதாந்தம் முதலிய பலநூல்களையும், அநேக காப்பியங்களையும் இயற்றியிருக்கிறார். இவரால் ஆக்கப்பெற்ற காப்பியங்களில் 'போஜசம்புவும் அலங்கார சாஸ்திரத்தில் ஸரஸ்வதீ கண்டாபரணமும் முதன்மை வாய்ந்தவை.

இந்த அலங்கார நூலை நம்மால் இயன்றமட்டில் தமிழில் மொழிபெயர்த்துச் "செந்தமிழ்ப்பத்திரிகை" வாயிலாகத் தொடர்ந்து வெளியிட்டுவருவோம்.

V. S. R.

நூல்.

𑌧𑍍𑌵𑌨𑌿𑌵𑌰𑍍𑌣𑌾𑌃 𑌪𑌦𑌂 𑌵𑌾𑌕𑍍𑌯𑌮𑌿𑌤𑍍𑌯𑌾𑌸𑍍𑌪𑌦𑌚𑌤𑍁𑌷𑍍𑌟𑌯𑌮𑍍 ।
𑌯𑌸𑍍𑌯𑌾𑌃 𑌸𑍂𑌕𑍍𑌷𑍍𑌮𑌾𑌦𑌿𑌭𑍇𑌦𑍇𑌨 𑌵𑌾𑌗𑍍𑌦𑍇𑌵𑍀𑌂 𑌤𑌾𑌮𑍁𑌪𑌾𑌸𑍍𑌮𑌹𑍇 ॥ க ॥

நூற்றொடக்கத்தில் தம் வழிபடுகடவுளை வணங்குதலென்ற பெரியோர்வழக்கைத் தழுவி நூலாசிரியர் கலைமகளைத் தொழுகிறார்.

ஒலி, எழுத்து, சொல், வசனம் என்ற பாகுபாடுகளுடன் பொருள்களைத் தெளிவுபடுத்திப் பாஷையுருவமாக விளங்குகிற கலைமகளை நான் வணங்குகிறேன்.

𑌨𑌿𑌰𑍍𑌦𑍋𑌷𑌂 𑌗𑍁𑌣𑌵𑌤𑍍𑌕𑌾𑌵𑍍𑌯𑌮𑌲𑌙𑍍𑌕𑌾𑌰𑍈𑌰𑌲𑌙𑍍𑌕𑍃𑌤𑌮𑍍 ।
𑌰𑌸𑌾𑌨𑍍𑌵𑌿𑌤𑌂 𑌕𑌵𑌿𑌃 𑌕𑍁𑌰𑍍𑌵𑌨𑍍𑌕𑍀𑌰𑍍𑌤𑌿𑌂 𑌪𑍍𑌰𑍀𑌤𑌿𑌂 𑌚 𑌵𑌿𑌨𑍍𑌦𑌤𑌿 ॥ உ ॥

குற்றமற்றதாயும், குணம்பொருந்தியதாயும், அணிகளால் அலங்கரிக்கப்பெற்றதாயும், சுவைநிரம்பியதாயும் உள்ள காப்பியத்தை இயற்றுவதால், கவியானவன் (சுவர்க்கத்தைத் தரக்கூடிய) புகழையும், (அறிவாளர்கள் போற்றுவதாலும் தானாகவே உணர்வதாலும்) மகிழ்ச்சியையும் அடைகிறான்.

𑌦𑍋𑌷𑌾𑌃 𑌪𑌦𑌾𑌨𑌾𑌂 𑌵𑌾𑌕𑍍𑌯𑌾𑌨𑌾𑌂 𑌵𑌾𑌕𑍍𑌯𑌾𑌰𑍍𑌥𑌾𑌨𑌾𑌂 𑌚 𑌷𑍋𑌡𑌶 ।
𑌹𑍇𑌯𑌾𑌃 𑌕𑌾𑌵𑍍𑌯𑍇 𑌕𑌵𑍀𑌨𑍍𑌦𑍍𑌰𑍈𑌰𑍍𑌯𑍇 𑌤𑌾𑌨𑍇𑌵𑌾𑌦𑍌 𑌪𑍍𑌰𑌚𑌕𑍍𑌷𑍍𑌮𑌹𑍇 ॥

சொற்குற்றமும், வாக்கியக்குற்றமும், பொருட்குற்றமும் (தனித்தனி) பதினாறுவகைப்படும். அவை, கவிவாணர்களால், காப்பியம் இயற்றுங்கால் விலக்கத்தக்கனவாகும். அவற்றை முதலிற் கூறுவோம்.

[தொடரும்.]

V. S. ராமஸ்வாமி சாஸ்திரி, B.A., B.L.
மதுரை.

பழனிக்கோவை.

[௩௧-ஆம் பக்கத் தொடர்ச்சி.]

38. கிளிமொழிக்கிரங்கல்.

என்னன்னை யாண்டைய ளெப்போது பாலை யெனக்குதவு
மின்னனை யீரென்னும் வெய்யேன் பெறுமைமை மென்மொழிபோற்
பன்னிரு கையர் பழனியெண் ணூரிற் பதைபதைக்கும்
வன்னியிற் பாய்வனென் னும்மென்ன பாவமிவ் வண்கிளியே. (231)

அளிகமழ்குழலி யருஞ்சுரஞ்செல்லக்
கிளிமொழிநற்றாய் கேட்டுவாடியது.

39. சுடரோடிரத்தல்.

இடுக்கண் டவிர்த்தெம்மை யாள்வேள் பழனியில் யான்பயந்த
வடுக்கண்ட கண்ணியைக் காயேல் கடத்தவள் வாண்முகந்தான்
கடுக்கண்டர் முக்கண்ணும் போலுதித் தோங்கிக் கடந்துலகை
நடுக்கண்ட வாவிந்து வன்றுசெந் தாமரை நாண்மலரே. (232)

வெப்பந்தணிகென வெய்யோன்றன்னைச்
செப்பநற்றாய் தெரிந்துபராயது.

இவையிரண்டிற்கும் மெய்ப்பாடும் பயனும் அது.

40. பருவங்கினைந்து கவறல்.

செனிப்படி யார்க்கொழித் தாள்வேள் பழனியிற் செல்லுமென்மான்
றனிப்படி கக்குன்றுட் டன்பாவை கண்டஞ்சித் தண்கெண்டைநீர்
பனிப்படி வாகரற் காற்றாது சாயை படைத்தவள்போ
லினிப்படித் தெப்படி யில்வாழ்க்கை செய்வளவ் வேதிலற்கே. (233)

பயந்தாள்மிகவெனப் பயந்தாள்கவன்றது.

மெய்ப்பாடும் பயனும் அது.

41. நாடத்துணிதல்.

ஆலடிச் சாமிக் கரையங்கி லெட்டிலொன் றாய்ப்பழனி
வேலடி கட்கொரு மாவரை மாவிரை காணிகொள்ளும்

பாலடிப் புற்றடி யாமிரு மாநில மட்டுஞ்சென்று
காலடித் தேர்வனஞ் சேலஞ்சி லோதிநங் கன்றினையே. (234)

ஆடமைத்தோளியை நாடத்துணிந்தது.

மெய்ப்பாடு—அழுகையைச்சார்ந்த பெருமிதம். பயன்—ஆற்றாமை யாற்றுவித்தல்.

42. கோடிக்குறிபார்த்தல்.

கந்தங் கமழ்குழற் கன்னியு மன்னும் வரக்கரைந்தாற்
சந்தங் கடம்பு புனைந்தோர் பழனிச் சதுரர் கைவேல்
வந்தங் கருத்தலிற் கையா னிணப்பலி வைப்பனுனக்
கைந்தங்கப் பண்புகொண் டாறங்கந் தேற்று மருங்கொடியே. ( )

மறிக்கொடிநற்றாய் குறிக்கொடிபராயது.

43. சோதிடங்கேட்டல்.

நிணக்கோல வேல்கொண்ட மேலோர் பழனியி னீலமுகி
லுணக்கோ லுநீர்பின் னும்வேலையுட்பாய்ந்தென்னவோகைபொங்கிக்
குணக்கோல் வளையுங் குழகனு மீளக்கண் கொண்டிவண்யா
மணக்கோலங் காண்குறி யுண்டோகண் டந்தணிர் வாழ்த்துமினே.

கோதிடங்கொண்டு நாடுங்கோடாய்
சோதிடர்தம்மைச் சொன்மினென்றது.

இவையிரண்டிற்கும் மெய்ப்பாடு—மருட்கை. பயன்—எதிர்காலச் செய்கை யுணர்தல்.

44. சுவடுகண்டறிதல்.

செடிப்பற் றமணர் பிறர்க்கறங் கூறிமண் சீத்துநடை
படிப்பித்தல் போலொன்றிச் சென்றதன் றேபழ னிக்கந்தர்தாட்
பிடிப்புற்றி லாரிற் பொடிப்பற்றிக் கால்குந்திப் பேதைநிற்கத்
துடிப்புற்ற கள்வ னடிமேற்கொண் டேகுமித் தோற்றங்களே. (237)

அவர்நடைசுவட்டிற் செவிலிகண்டறிந்தது.

45. சுவடுகண்டிரங்கல்.

பூவில்விட் டேரடி பாரில்விட் டாற்புண்ட ரீகமுத்தஞ்
சேவடிக் கொள்வன் சனக பிரான்சந்துந் தீயுமொன்றாய்

மேவியொத் தாலென்னச் செவ்வேள் பழனி விடலையொடும்
பாவியக் கான்மகள் காலென் படாதிப் பரற்சுரத்தே. (238)

தோடார்குழலி சுவடதுகண்ட
கோடாய்கவலை கூறாநின்றது.

46. வேட்டமாதரைக் கேட்டல்.

பொதும்பர்க்குட் போய்க்குஞ்சை யஞ்சுகம் போற்றல்கண் டென்னைப்புல்கும்
பெதும்பைப்பெண் ணொன்று நடைப்பயின் மாரன் பெடைப்பரிபோற்
கதம்பச்செவ் வேள்பழ னிக்கானை பின்செலக் கண்டதுண்டோ
குதம்பைக்குப் பூக்கொய் குறத்தியிப் பீலிக் கொடியிடையே. (239)

மலர்கொயும் வேட்டமாதரைப் (?)
பொலனிழைச்செவிலி பொருந்திவினயது.

47. புறவோடுபுலத்தல்.

துறவே தினைப்புனத் துற்றோர் பழனி தொழாரில்வஞ்சன்
மறவே தினைத்தபுண் வாங்குஞ் சடாயு மரபில்வந்தாற்
புறவே தினையறி வாய்புற வேதினைப் போதுமறித்
துறவே தினையட்கென் றேன்கேட்கி லாய்மற் றொருவனையே (240)

புறவொடுசெவிலி குறைபாடுரைத்தது.

48. குரவோடுபுலத்தல்.

தொத்துங் கிளையும்பல் பாவையுஞ் சூழ்த்திச் சுடர்குரவே
வைத்தங்கு வேலர் பழனிக்கென் பாவைவன் பேய்நரிகள்
கத்துங் கடத்தொரு காளைபின் வேள்வினைக் காணச்சென்றோ
ளொத்திங் கணுகத்தக் கன்றேவி போற்செருக் குற்றனையே. (241)

சுரிகுழற்செவிலி குரவொடுபுலந்தது.

இவை யைந்திற்கும் மெய்ப்பாடு—அழுகை. பயன்—ஆற்றாமை நீங்குதல்.

49. விரதியரைவினுதல்.

கட்டங்கத் தெண்டுடைகோவணங் கக்கத்துப் பொக்கணத்தோ
டெட்டங்கத் தோன்குரு வையா புரியைய ரென்னச்செல்வீர்

தொட்டங்கட் பிஞ்சுப் பிறைக்குமுன் பேவருஞ் சூரியன்போ
லுட்டங்கப் பேதையொண் ணுடொரு காளையின் குற்றதுண்டோ.

எதிரும்விரதரை யேந்தலிற்சுட்டி
விதிருஞ்செவிலி விரும்பிவினயது.

50. வேதியரைவினுதல்.

இல்லுந் துறந்து மதன்கோலந் தங்கியில் வாட்டவென்றாழ்ச்
செல்லும் பதம்பெற் றருட்பதி பாசத்திற் சேர்ந்தொருமான்
வெல்லுந் தனிப்படை வேல்வேள் பழனியில் மேவச்சென்றுற்
சொல்லுங்கண்மூவரிற்றெரல்கோல்வெண்ணூலணிதோற்றத்தரே.

பேதையிற்சுட்டிப் பெய்வளைச்செவிலி
வேதியர்குழாத்தை விழைவொடுங்கேட்டது.

இவையிரண்டிற்கும் மெய்ப்பாடு—அது. பயன்—தலைமகளைக் காண்டல்.

51. புணர்ந்துடன்வருவோரைப் பொருந்தி வினுதல்.

கனியென் றுவப்பக்கல் வீழ்ந்ததிற் கண்டிரு கள்வர்நும்போற்
றனியன்றிச் சென்றனரோவென்னுந் தாய்சம் புவைப்பிருங்கிப்
புனிதன்கண் டென்னச்செவ் வேள்பழ னிக்கெம்பி போதல்கண்டே
னினியென்கொ லிவ்வன்னை கேளாக் குறைகண்மற் றேறந்திழையே.

இருவோர்ச்சுட்டிக் கேட்பப்புணர்ந்துடன்
வருவோன்றன்பான் மங்கையொடாய்ந்தது.

மெய்ப்பாடு—அழுகையைச்சார்ந்த வுவகை. பயன்—அது.

[தொடரும்.]

T. K. இராமாநுஜையங்கார்,

உதவிப்பத்திராசிரியர்.

கம்பராமாயணசாரம்.

[அ-ஆம் பக்கத் தொடர்ச்சி.]

இலங்கைகாண்படலம்.

(இராமன்) இலங்கைநகர்(ச் சிறப்பைக்) கண்டதைக் கூறுவது.

இராவணன் இப்போது யாதுசெய்வதெனச் சேனாதிபதி கூறுதல்.

['எதிரிகள் கடல்கடந்து இலங்கைக்கரையை அடைந்து விட்டார்கள். இப்போது செய்யத்தக்கது யாது' என, இராவணன் வினவச் சேனாதிபதி செப்புவானுனன்.

'இப்போது சீதையை விட்டோமானால், இமையோர் இகழ்வர். எதிரிகள் சமாதானஞ் செய்ய இசைந்தாலும், உன் தம்பி விபீடணன் இசையவொட்டான். நாம் முன்னமே பகைவரிருந்த இடத்துக்குப் போய்ச் செயித்தோமில்லையே என்ற கவலைக்கிடமில்லாமல் அவர்கள் இங்கேயே வந்துவிட்டது நல்லதே. இது நம் வெற்றிக்கறிகுறியாம். நமக்கு ஒரு குறைவுமில்லை. நம் சேனை ஆயிரம்வெள்ளங்கொண்டது. அவ்வளவு பெருஞ்சேனையை எதிரிகள் அழித்துமுடிக்க மிகநெடுங்காலமாகும். இதனைக் கூறுவானேன். நீ ஒருவனே எதிர்ப்பாயானால், சிங்கத்தைக் கண்ட நாய்க் கூட்டம்போல, வானரப்படை ஓடியொழிந்துபோம். சேனையும் நானும் சென்று இங்கு வந்த இராமனுதியர், சேனையோடு சிதறிக் கடலில் விழுந்து அழிந்து ஒழிந்துபோகச் செய்துவிட்டுத் திரும்புவேன். விடைதருக' என்று சேனாபதி செப்பினான்.

மாலியவான், இராமன்மகிமையைக் கூறிச் சீதையை விடச்சொல்லுதல்.

'இராமனை ஈசனுக்கும் ஈசனாய்ப் பரஞ்சோதியின் உச்சித் தானத்திலே உள்ள பரமபதி யென்கின்றார்கள். சீதையை எளியவளென்றெண்ணி யிகழாதே. அவள், அமிழ்தத்தோடு அவதரித்தவளென்றும், உலகமாதாவென்றும், எத்தாய் வயிற்றினும் பிறவாத

சுத்த உத்தம அயோநிசையென்றும் சொல்லுகிருர்கள். இராமன் முதலோர், தேவர்கள் வேண்டக் காட்டுக்கு வந்தார்களென்றும், இலங்கையின் காவற் றெய்வமாயிருந்த இலங்கணி, அரக்கர் தோல்விக்குத்துவசாரோகணமாக, அனுமானுல் தோல்வியடைந்து தூரத்தப்பட்டாளென்றும் சொன்ஞர்கள். சொல்லை வளர்ப்பானேன். இராக்கத ரெல்லாரோடும் இராவணனும் இராமபாணத்துக்கு இலக்காவானென்று அறிவாளருள் அறிவாளனும் அமரர் மந்திரியுமான பிருகற்பதியின் பேரறிவுக்கும் அதிகமாக ஒரு முழம் உயர்ந்த பேரறிவுடைய உன் தம்பி விபீடணனே உரைத்துவிட்டுப் போனனல்லவா?* இவையெல்லாந் தெரிந்தும், ஆதியில் நம் குலம் அழிந்தது இராமனுகவந்திருக்கிற திருமாலினுலேயே என்பதை நினைந்தும், உன்மேல் உள்ள அன்பினுல் தூண்டப்பட்டும், நெஞ்சிலே வேதனைமிஞ்சி, விளையப்போவதைச் சொன்னேன். சீதையை விடுவாயானுல், தீங்குகள் யாவும் நீங்கிவிடுவாய்' என்று (மாலியவான்) சொன்னுன்.

மாலியவானைப் பரிகசித்து இராவணன் தன் மேம்பாடுகூறுதல்.

'பாட்டா!, நீ கூறிய மற்றக்கதைகளெல்லாம் போகட்டும். வானவர்களே மனிதராகவும் வானரராகவும் வந்திருக்கின்ருர்களென்று சொன்னதோடு நில்லாமல், நான் தோற்பேனென்றும் சொன்னுயே. இதுதானு, நீ கற்ற கல்வியின் பயன். அறிவற்ற மனிதரும் அற்பக்குரங்குகளும் கிடக்க, பூலோகத்திலும் தேவலோகத்திலும் அதற்குமேலாக அப்பாலுள்ள பிரமலோகமுதலான சருவலோகங்களிலும் உள்ளாரெல்லோரும் ஒருங்குதிரண்டு நெருங்கிவந்து போர்புரிவாராஞலும், அந்தப்போருக்குக் காரணம் சீதையன்றி வேருயிருந்தால் நான் பொராதுவிட்டாலும், அவள் காரணமாயிருந்தால் ஒருகாலும் பொராது விடுவேனே? முன்னுளில், தேவரைத்துளைத்த என் னம்புகள், இந்நாளில் மனிதரையும் வானரரையும் துளைக்காவோ? சூலபாணியான தேவதேவனே என்னை எதிர்ப்பானுனல், அவன் பின்னிடைவதன்றி என்னசெய்ய

---

* உம்பர்மந் திரிக்கு மேலா ஒருமுழம் உயர்ந்த ஞானத்
தம்பியே சாற்றிப் போனுன். (கடு-ஆம் பாட்டு.)

முடியும். அவன்சூலம் என்னை யாதுஞ் செய்யமாட்டாததாய் வீணாய்விடும். அவன்மேலெய்யும் என் அம்புகளோ, பயன்படாது பாழ்போகா. அவை, என்ன, அனைத்துலகும் அஞ்சவந்த ஆலகாலவிடமா, அவன் விழுங்கிவிடுதற்கு? முன்தோற்றோடிய திருமால் எதிர்வானாயின், செங்கதிரும் வெண்கதிரும் தீந்துபோம்படி தீப்பொறிகள் கக்குகின்ற என் பாணங்கள், அவன் மார்பூடுருவிப் போகும்; அவைகள் அவன் மார்பிலணியக்கூடிய கவுத்துவ மணியல்ல. அநுமானை சிவன்போல, இந்திரனும் குரங்குவடிவங் கொண்டுவந்து, என்னை எதிர்த்து, வச்சிராயுதத்தைப்பிரயோகிப்பானானால், அது, என் புயமலைகளை என்செய்யும்? அதனாற் சிறகரியுண்டபொற்றைமலைகளோ, என் புயமலைகள்?' என்று இராவணன் கூறினான்.

சூரியோதயவருணனை.

நாம் (சூரியன்) இன்றளவும் இராவணனுக்கஞ்சி, இலங்கைக்கு நேரே ஏகாமல், தெற்கும் வடக்கும் விலகிச்சென்றோம். இப்போது, அங்கே, இராமன் வந்திருப்பதால் (அவன் நம்மைக் காப்பானென்ற துணிவினால்) அஞ்சாது நேரேசென்று, அந்நகரழகைக் காணக் கொண்டிருந்த நெடுங்கால ஆசையை நிறைவேற்றுவோமென்று துணிந்தெழுந்தாற்போலச் சூரியன் தோன்றினான்.

விடியல்வருணனை.

அப்போது, தம் உயிர்போன்ற காதலரிடம் தம் உள்ளத்தையே தூதாகவிடுத்து அவர்வரவை இரவுமுழுதும் எதிர்பார்த்திருந்த காதலியர், தம் அன்பரோடு இன்புறுதற்குரிய இரவு கழிந்ததேயென இரங்காநிற்க, எங்கும் மூடியிருந்த இருள், வெள்ளம்வடிந்தாற்போல, மெள்ள விடிந்தது.

இராமன் எல்லாரோடும் சுவேலமலையுச்சியை யடைந்து இலங்கையைக் காணுதல்.

இலங்கையைக்காணும் அவாவை அது சீதைக்கிருப்பிடமாயிருப்பதுபற்றிய காதலெண்ணம் அதிகப்படுத்த, இராமன் வானரராசனாகிய சுக்கிரீவனும் இராக்கதராசனாகிய விபீடணனும் இரு

பக்கத்தும் கைலாகுகொடுத்துவர, இலக்குமணன் பின்வர, மற்றெல்லாரும் தொடர, சிங்கங்களும் புலிகளும் சூழ்ந்துவரப்பெற்ற இராசசிங்கம்போல இலங்கைக்கு வடக்கேயுள்ள சுவேலமலையுச்சியை அடைந்தான். அடைந்தவன் செஞ்ஞாயிறு கருஞாயிறாகிக் கிழக்குவிட்டு வடக்குதித்ததையொத்தான்.]

இராமன் இலக்குமணனுக்கு இலங்கைக் காட்சியை எடுத்துக்கூறல்.

32 நந்திரு நகரே யாதி வேறுள நகர்கட் கெல்லாம்
வந்தபே ருவமை கூறி வழுத்துவா னமைந்த காலை
இந்திர னிருக்கை யென்ப ரிலங்கையை யெடுத்துக் காட்டார்
அந்தர முணர்தல்[1] தேற்ற ரருங்கவிப் புலவ ரம்மா.

கொண்டுகூட்டு: *அருங்கவிப்புலவர், நம் திருநகரேயாதி வேறு உள்ள எல்லா நகரங்கட்கும் வந்த பேருவமைகூறி வழுத்துவான் அமைந்தகாலை, (அந்த உவமை) இந்திரன் இருக்கை என்பர்; இலங்கையை எடுத்துக்காட்டார். அந்தரம் உணர்தல் தேற்றார், அம்மா !*

பொருள்: *(இலக்குமணா,) அருமையான கவித்துவமுடைய புலவர் (பெருமக்கள்) நமது அழகிய அயோத்திமாநகர் முதலிய வெவ்வேறுள்ள எல்லா நகரங்களுக்கும் உவமானமெடுத்துக்கூறிப் புகழும்போது, இந்திரனது அமராவதிநகரையே உவமானமாக எடுத்துக்காட்டுவார்கள். (அதனினும் எத்தனையோ மடங்கு சிறந்த இந்த) இலங்கையை எடுத்துக்காட்டார்; ஏனெனில், அவர்கள், (இந்திரனகரினும் இலங்கைநகர் சிறந்ததாயிருக்கும்) வித்தியாசந்தெரியாதவர்களாயுள்ளார்கள். (நமக்குத் தெளிவாயுள்ள இந்த வித்தியாசத்தை அரிய கவிவாணர் அறியாதது) ஆச்சரியம்.*

வழுத்துவான் - புகழும்படி. அந்தரம் - பேதம். தேற்றுதல் - தெளிதல். அம்மா - அதிசயக்குறிப்பு.

பாடபேதம்: [1] *அறிதல்.*

33 விரிகின்ற கதிர வாகி[1] மிளிர்கின்ற மணிகள் வீசிச்[2]
சொரிகின்ற சுடரின் சும்மை விசும்புறத் தொடருந்[3] தோற்றம்
அரிவென்ற[4] வெற்றி[5] யாற்றன் மாருதி யமைத்த[6] தீயால்
எரிகின்ற தாமே[7] காணிக் கோடிநக ரிருந்த தின்னும்[8]

கொண்டுகூட்டு: விரிகின்ற கதிர ஆகி மிளிர்கின்ற மணிகள் வீசிச் சொரிகின்ற சுடரின் சும்மை, விசும்பு உறத் தொடரும் தோற்றம், அரி வென்ற வெற்றி ஆற்றல் மாருதி அமைத்த தீயால், இக்கொடிநகர் இன்னும் எரிகின்றது (ஆக) இருந்ததாம்; காண் ஏ!

பொருள்: (இந்நகரத்து மாளிகைகளில் இழைத்த) இரத்தினங்கள் சொரிகின்ற ஒளிகளின் தொகுதி, ஆகாயத்தை அளாவத் தொடரும் தோற்றமானது, அனுமான் கொளுத்திய தீயினால் இலங்கைநகர் இன்னும் எரிந்துகொண்டிருப்பதுபோலும்.

கதிர - கிரணங்களையுடையன. சுடர் – ஒளி. சும்மை – தொகுதி – கூட்டம். அரி(யை) - சத்துருக்களை. ஆற்றல் - வல்லமை. மாருதி - அனுமான். ஆம் - போலும். 'ஆள்வாரிலிமாடாவேனோ' என்பதில், ஆதல், போலுதலெனப் பொருள்படல் காண்க. ஏ, காண், அசைகள்.

பாடபேதம்: [1] கதிரதாகி. [2] வீசச். [3] தொடர்ந்த, சுடரும். [4] என்ற. [5] வென்றி. [6] மடுத்த, அளித்த. [7] ஆயே. [8] இருந்த தோற்றம்.

[பச்சைக்கற்படுத்த தளவரிசைமீதுள்ள செம்பொன்மாளிகைகளின்மேல் (வெள்ளிய நிலாமணிமுற்றம் அமைத்தற்குப் பொருத்தமாக) வெள்ளியினுலியற்றப்பெற்ற உப்பரிகை, பச்சிலைப்பரப்பினூடே செந்தாமரைப் பூக்களின்மீதே வீற்றிருக்கும் வெள்ளன்னங்கள் போல்கின்றன.

கரியமேகம், மாணிக்கமாளிகைகளின் மேலாகச் செல்லும்போது, (அம்மணிகளின் செவ்வொளி பாயச்) சிவந்து தோன்றுதலானது, அனுமான் இலங்கையைக் கொளுத்திய தீச்சுவாலைக்குள்ளாகிக் காய்ச்சப்பட்ட (இயல்பாகக் கருநிறமுடைய) இரும்பு, சிவந்த தகடானதுபோலும்.

(அசையாத) கருமலைபோலும் கரிய பெரிய யானைகள் இலங்கைத் தெருக்களின் பொற்புழுதிகளைத் தம் துதிக்கைகள் கொண்டு தம்மேல் வீசியெறிந்து பொன்னிறம்படைத்துச் செல்வன, பொன்மலை (நடப்பது) போல்கின்றன.

இலங்கைநகரத்துக் கொடிச்சீலைகள், காற்றுலலைந்து மேலே படர்ந்த மேகத்தை ஒதுக்குதல், அந்த நகராகிய பந்தலின்மேல் வானமாகிய விதானம் மாசுபடிந்ததை நீக்கித் துலக்குதல்போலும்.

மாளிகைவரிசைகள் மணிவடங்களாக, அவைகளின் மத்தியில் உள்ள மறுகுகள் வடங்களினிடையே விளங்கும் இடங்களாக, இராவணன் அரண்மனையாகிய நடுநாயகமணியும் அதனைச் சூழ்ந்த இந்திரசித்து முதலிய அவன் குடும்பக் கோமக்களின் அரண்மனைகளாகிய சுற்றுமணிகளும் உள்ள அரண்மனைத் தொகுதி பதக்கமாக அமையப்பெற்ற இலங்கைமாநகரமாகிய இரத்தினமாலை, கடலாசனது நல்லணியாய்விளங்கிக் கண்ணுக்கினிய காட்சியை அளிக்கின்றது.*

வெவ்வேறு நிறமுள்ள பொருள்கள் பிரதிபலித்தாலன்றிக் காணப்படாத பளிக்குமாளிகைகள், (தனக்கெனநிறமில்லாத) நீரினாலமைக்கப்பட்டனவோ என்னும்படி யிருக்கின்றன.

அதோ, தோன்றுகின்ற மேல்மாடத்திலே இராவணனாற் சிறைப்படுத்தப்பட்டுள்ள ஒரு தேவமாது கரும்பட்டுறையினின்று வெளியே கழற்றிய வட்டக்கண்ணாடி, விழுங்கியிருந்த இராகுக்கோள்† வெளிப்படக் கக்கிய வெண்மதியை ஒத்திருக்கின்றது.

மேன்மாளிகைகளிலிழைக்கப்பெற்றசெம்மணிகள்வீசும்செவ்வொளியைத் தேமாந்தளிரென்று ஒட்டகங்கள் தங்கள் நெடுங்கழுத்தை நீட்டி நிமிர்தல் விநோதமாயிருக்கின்றது.

நீராடிய மாதர்கள் கூந்தலீரம் புலர்தற்கு ஊட்டும் அகிற்புகையாற் சூழப்பட்ட பவளமாளிகை, யானைத்தோல்போர்த்த சிவபெருமானை ஒத்திருக்கின்றது.

கவர்ந்துகொள்ளுதலன்றி உவந்துகொடுத்தலறியாத உள்ளத்தினரான இராக்கதர் தேடித் திரட்டிவைத்த பாவக்குவியல்கள்போல நீலமணிச்செய்குன்றுகள் காணப்படுகின்றன.‡

இராவணனாற் பிடிக்கப்பட்டுச் சிறையிலிருந்து வருந்தும் தேவமாதர், தம்மைச் சிறைநீக்க வந்தனரென்று மகிழ்ந்து நம்மைப் பார்ப்பவர்கள், மேகம் வரக் கண்டு களிக்கும் மயில்கள்போல்கின்றார்கள்.

---

* 'நூல் பட' என்ற ௩அ-ஆம் பாட்டின் விரிவுரை.

† இராகுக்கோள் - கரும்பாம்பு.

‡ பாவத்தின் நிறம் கருப்பென்பது கவிமரபு.

மேல்மாடத்தினின்று நமது படையைப் பார்ப்பதற்குப் படிக் கட்டுவழியே மேல்நோக்கியேறும் தேவமைந்தரும் மாதரும், 'இராக்கதர் இவ் வானரப்படையாற் றடைப்பட்டு நம்மைத் தடுக்க மாட்டார். இந்நகர்பாழ்பட, இதனினின்று நீங்கி, நம் விண் ணுலகத்துக்குச் செல்வோம்' என்று மேல்நோக்கிச் செல்கின்றார் போல்கின்றார்கள்' என்று இராமன் இலக்குமணனுக்குக் கூறி, மேற்கொண்டும் கூறப்போகும்போது, இராவணன், வானர சேனை யைக் காணக் கருதி, ஆகாயத்தையளாவிய தன் மாளிகைக் கோபுரத்துச்சியி லேறிநின்றான்.]

இலங்கைகாண்படலம் முற்றிற்று.

இராவணன் வானரத்தானை காண்படலம்.

இராவணன் வானரசேனையைப் பார்வையிட்டதைக் கூறுவது.

இராவணன் தோற்றம்.

[வடக்குவாசற்கோபுரத்தின் உச்சியில் ஏறிநின்ற (பத்துத் தலை) இராவணன் ஒருமலைமேல் பலசிகரங்களையுடைய மற்றொரு மலை நின்றாற்போலக் காணப்பட்டான்.

மலைக்குமேலே நிலவெறிக்குஞ் சந்திரன்போல வெண்கொற் றக்குடை சிரமேல் நிழல்செய்து விளங்க, மலைமீது தத்திவிழும் அருவிபோலச் சாமரைவீசுங் காற்றால் மேலாடையசைந்துலாவ, மேனகை, அரம்பை, ஊர்வசி, திலோத்தமை முதலிய ஆடல்மக ளிர் பாடல்மகளிரான தேவமாதர் அருகே தத்தம் தொழில்செய் யச் சித்தமாய்நிற்க, இருபதுகாதுகளிலேயும் நூற்பொருள்களை அறிஞர் ஓத, வேதகீதத்தை வீணையாலிசைத்துப்பாடி நாரதர் காதுமிர்தத்தை வார்க்க, வில் வாள் முதலிய படைக்கலங்களை யேந்திய கையினராய் இடிக்கும் மேகமும் நடுக்குற்று உதிரும்படி உறுமிக்குமுறும் உரத்த குரலினராய் மெய்காவலாளர் விழிப் பொடு சூழ்ந்து காத்துநிற்க, வடக்குவாசற்கோபுரமீதுநின்ற இரா வணன், அதற்கு வடக்கே சுவேலமலையுச்சியில்நின்று இலங்கை வளங்காணும் இராமனைக் கண்டான். காணவே, கோபத்தால் வாய் கள் மடித்தன, கண்கள் தீப்பொறி சிந்தின, இடக்கண்களும், இடத் தோள்களும் துன்னிமித்தமாகத் துடித்தன.

சாரணனை* நோக்கி இராவணன் கூறல்.

'மற்றவர்களுக்கு முற்பட்டு முதல்வனென நிற்பதனாலும் நீல நிறத்தாலும் இராமனைத்தெரிந்துகொண்டேன். ஏனைய வீரரை இன்னாரின்னாரென இயம்புவாயாக' என இராவணன்கூறச் சாரணன் சாற்றுவானானன்.

சாரணன், வானரப்படையிலுள்ள பிரமுகர்களைத் தெரிவித்தல்.

சாரணன், வானரசேனைவீரரைச் சுட்டிக்காட்டித் தெரிவிக்கத் தொடங்கி, இலக்குமணனைச்சுட்டி 'அவன், சூர்ப்பனகையை அங்கபங்கஞ்செய்தவன், உறங்காவிரதி, இலக்குமணன் என்பான்; அவன் கைபற்றி நின்றவன், சூரியகுமாரனான சுக்கிரீவன்; அடுத்துக் காணப்படுபவன், வாலிகுமாரனான அங்கதன்; அவன் அனுமான்; இவன், வானரசேனாபதி நீலன்; உவன், கடலணை நிருமித்த நளன்; அவன், கரடிகட்கரசனான சாம்பவான்; இராமலக்குமணர்போலச் சேர்ந்துநிற்கும் இருவர், அசுவினி தேவரின் குமாரர்கள்; அவர்களுக்கப்பால் நிற்பவன், அனுமானின் பிதாவான கேசரி, மற்றைத் தலைவர்கள், குமுதன் குமுதாக்கன் கவியன் கவியாக்கன் மூரபன் சரபன் இடபன் சுடேணன் ததிமுகன் சங்கன் முதலியோர். கடற்கரைமணலையும் கடல்மீன்களையும் கணக்கிட்டாலும், விண்மீன் (நட்சத்திரங்)களை எண்ணினாலும், இந்த வானரர்தொகையைக் கணிக்கமுடியாது' என்றான். எனவே, இராவணன், கோபச்சிரிப்புச்சிரித்துக் 'கொல்லையிலே திரிகின்ற அற்பக்குரங்குகளை எல்லையின்றிப் புகழ்கின்றாயே. வனங்களில் அலைகின்ற பலவான மான்கூட்டங்கள் ஒரு சிங்கத்தின் எதிர்நிற்குமோ' என்று (அத்தனை குரங்குகளையும் தான் ஒருவனே அதஞ்செய்துவிடக்கூடுமென்ற குறிப்புடன்) கூறினான்.]

இராவணன் வானரத்தானைகாண்படலம் முற்றிற்று.

[தொடரும்.]

வெ. ப. சுப்பிரமணியமுதலியார்.

---

* சாரணன் - முன் வானரசேனையைப் பார்த்துவந்த இரண்டு ஒற்றர்களில் ஒருவன்.

உ

பொன்பரப்பினான் மகதைப்பெருமாள்.

[இலக்கணவிளக்க ஆசிரியர் பரம்பரை—திரு. சோமசுந்தரதேசிகர்.]

தேரு லைப்புரவி வார ணத்தொகுதி
திறைகள் கொண்டுவரு மன்னரின்
றேய மேதுனது நாம மேதுபுகல்
செங்கை யாழ்தடவு பாணகேள்

வாரு மொத்தகுடி நீரு நானுமக
தேச னாறைநகர் காவலன்
வாண பூபதி மகிழ்ந்த ளித்தவெகு
வரிசை பெற்றுவரு புலவன்யான்

நீரு மிப்பரிசு பெற்று மீளவா
லாகு மேகுமவன் முன்றில்வாய்
நித்தி லச்சிகர மாட மாளிகை
நெருங்கு கோபுர மருங்கெலாம்

ஆரு நிற்குமொரு வேம்பு நிற்குமுயர்
பனையு நிற்குமத னருகிலே
அரசு நிற்குமா சைச்சு மந்தசில
வத்தி நிற்குமடை யாளமே.

என்று ஒருபுலவர் பாடியதாக ஒருசெய்யுள் காணப்படுகிறது.[1] இச்செய்யுளிலே மகதேசன், ஆறைநகர்காவலன், வாணபூதி என்ற பெயர்களையுடைய ஒரு சிற்றரசனிடம் பரிசில்பெற்ற பாணனொருவன், மற்றொருபாணனை அம்மகதேசன்பாற்சென்று பரிசில்பெற்று வருமாறு ஆற்றுப்படுத்தமை கூறப்பட்டுளது. இந்த மகதேசன் யாவனென ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

இந்தச்செய்யுள் மகதேசனை வாணபூபதியென்று கூறுகின்றது. வாணபூபதி என்பது வாணவமிசத்தரசன் எனப் பொருள்படும். வாணர்கள் ஒருகாலத்தில் சுயேச்சையுடைய அரசர்களாயும் பல

[1] பெருந்தொகை. 1192. தொண்டைமண்டலசதகமேற்கோள்.

காலங்களில் பல்லவர் சோழர்களின்கீழ்ச் சிற்றரசர்களாயும் வாழ்ந்தவர்கள். இவர்களுடைய தனிமையையும் தலைமையையும் குலைத்தவன் முதற் பராந்தகசோழனாவான். இச்சோழன் வாணர்களை வென்று அவர்களுடைய இராச்சியத்தைப்பறித்துக் கங்கர்களுக்குக் கொடுத்து அவர்களைத் தெற்கிற் குடியேறச்செய்தான்.[1] தெற்கே வந்த வாணர்கள், சேலம்ஜில்லாவிலுள்ள ஆற்றூர்க்கணவாய்ப்பக்கத்திற் றங்கி அந்நாட்டிற்கு மகதைநாடெனப் பேரிட்டு அங்கே வாழ்வாராயினர். அவர்களில் ஒருவனே இந்த மகதேசன்.

மகதேசன் கொடிமுதலியன.

இந்த மகதேசன் மகதைப்பெருமாள், மாகதன், மகதைநாடாள்வான், வாணதிவாகரன், வாணர்பிரான் என்று பலபடியாக அழைக்கப்படுகிறான். இவனது இயற்பெயர் இன்னதென விளங்கவில்லையாயினும், இவன் இராஜராஜவாணகோவரையன் என்றும் பொன்பரப்பினான் மகதைப்பெருமாள் என்றும் சொல்லப்படுவன். இவன் பிறந்தநாள் உத்திராடம் என்று தெரிகிறது.

பாரோங்கு கொற்றக் குடைவாணன் பல்புரவித்
தேரோன் திருவுத்தி ராடநாள்—பேருவமைக்
குன்றடா மால்யானைக் கோவேந்தர் வீற்றிருப்பர்
இன்றெடா னின்றெடா னென்று.

என்ற வெண்பா இதனை வலியுறுத்தும். வாணர்கள் இடபக்கொடியும் இடபலாஞ்சனையுமுடையவர்களாயினும், இவன் அவைகளோடு கருடக்கொடியுமுடையவனென்ற பின்வரும் வெண்பாவால் தெரிகிறது.

சென்னி புலிக்கொடியும் தென்னன் கயற்கொடியும்
மின்னுங் கழற்*பிறையோன் விற்கொடியும்—மன்னும்
வரிசைக் கொடைத்திருமால் மாவலிவா ணன்றன்
கருடக் கொடிக்கடியாங் காண்.

இவனுடைய யானை அயிராவதமெனப் பெயர்பெறும்.

---

[1] செந்தமிழ். 29, 387-396.

[* பொறையன் என்றிருக்கவேண்டும். உதவிப்பத்திராசிரியர்.]

பதவம் புயத்[துல காள்மக தேசனைக் கொண்]டபசுங்
குதவர் திருத்தொங்கல் வாணகு லோத்தம னுடைநெற்றி
மதவெங் கதத்தயி ராவதம் வந்தது வந்ததென்று
கதவர் திருத்தி யிடார்மது ராபுரிக் காவலரே.

நாமா னரவிந்த மான்விந்த மான்முடி நாகர்சென்னிப்
பூமான் விரும்பும் புகழ்மக தேசற்குப் போர்வழுதி
வாமான் றிறையிட்ட வக்காட் டொடங்கியவ் வானவர்தம்
கோமான் றனதென் றிரா*னம ராவதிக் குஞ்சரமே.

இவனுடைய மாலை ஆத்திமாலையென்று தலைப்பிற் குறித்த பாட்டால் அறியக்கிடக்கின்றது. இவன் ஈரணன் கோவலராயன் மகளான புண்ணியவதியாரை மணந்தான்.[1] அவள் ஆற்றூரிலும் ஆறகழூரிலும் பல தானங்கள் செய்துள்ளாள்.

மகதைநாடு.

ஆற்றூர்ப்பக்கத்திலுள்ள நிலப்பகுதி மகதைநாடென முன்னர்க்குறித்தேன். இச்செய்தி வலியுறச் சில சாதனங்கள் கிடைக்கின்றன. டாக்டர் ஹுல்ஷ் முதன்முதலாக மகதைமண்டலத்தைக்குறித்துப் பேசும்பொழுது இது கோயம்புத்தூர், சேலம் ஜில்லாக்களில் இருக்கவேண்டுமென்றும் ஒய்சளர் கூறும் மகரா என்ற நாடு இம் மகதைமண்டலமென்றும் எழுதினார்.[2] மகதை மண்டலம் திட்டைக்குடிக்கு அருகில் திருச்சிராப்பள்ளி தென்ஆர்க்காடு சில்லாக்களின் எல்லையோரமாக விருக்கவேண்டுமென்பர் வெங்கையா.[3] சேலம்ஜில்லாவிலுள்ள ஆற்றூர்த்தாலூகா மகதைநாடாகுமென்பர் டாக்டர் கிருஷ்ணசுவாமி ஐயங்கார்.[4] தென் ஆர்க்காட்டிலொருபகுதியும் சேலத்திலொருபகுதியும் வடஆர்க்காட்டிலொரு பகுதியுங் கொண்டது மகதைநாடு என்று 1925-ஆம் ஆண்டுக் கல்வெட்டறிக்கை கூறும். ஆற்றூரிற் காணப்படும் கல்வெட்டுக்களும் ஆறகழூரிற் காணப்படும் கல்வெட்டுக்களும் அந்நாட்டை மகதை

[* ஐயிராவதகுஞ்சரமே என்றிருக்கவேண்டும். உதவிப்பத்திராசிரியர்]

1 1913-ஆம் ஆண்டு 440, 447 நெ. கல்வெட்டுக்களால் புலனாகும்.

2 எபிகிராபியா இண்டிகா. xi, 240.

3 M. E. R. 1903.

4 INDIA under her muhammadan invaders, 41.

நாடென்று கூறுகின்றன. திட்டைக்குடி முதலான இடங்களில் மகதேசனுடைய கல்வெட்டுக்கள் காணப்படுவதுகொண்டும் வடஆர்க்காடுஜில்லாவில் சில பகுதிகளில் இவனுடைய கல்லெழுத்துக்கள் காணப்படுவதுகொண்டும் இப்பகுதி மகதைநாடெனப் பேர்பெற்றது என்று கூறுதல் தவறாகாது. இந்நாட்டுக்குத் தலைநகராக விருந்தது ஆறகழூர் என்பது. இவ்வூர் இதுபொழுது ஆறகழ்[1] என்று வழங்குகிறது. இவ்வூர் கல்ராயன் மலைகளில் உற்பத்தியாகி வெள்ளாற்றோடு கலக்கும் வசிஷ்டநதியின் தென்கரையில் சேலம் திருச்சிராப்பள்ளிஜில்லாக்களின் எல்லையோரமாக இருக்கிறது.

இந்தப் பகுதியை வாணர்கள் தெரிந்துகொள்ளக் காரணமாயிருந்தது, மேல் கொங்கிலிருந்து சோழநாடுபுகுவதற்கு இந்த ஆற்றூர்க்கணவாய் ஒருவழியாதலிற்போலும். அங்கு இவர்கள் தங்கியிருக்கவேண்டும்; அன்றி, அவ்வழியைத் திறமாகக் காக்கச் சோழர்கள் இவர்களை அவ்விடம் நிறுவினார்கள் என்று கொள்வதும் தவறாகாது. இஃதன்றி வாணர்கள் ஒருகாலத்தில் வடுகவழிக்கு மேற்கிலுள்ள நாட்டை யாண்டவர்களாதலின் இப்பகுதியும் அதனுள் அடங்குதல்கூடும்.

மகதேசனது போர்ச்செயல்கள்.

பாண்டிநாட்டிலே பராக்கிரமபாண்டியனுக்கும் குலசேகரபாண்டியனுக்கும் பாண்டியசிங்காதனத்தைக்குறித்துப் போர் உண்டாயிற்று. குலசேகரபாண்டியன் சோழவரசனான இராஜாதிராஜனை உதவிவேண்டினான். அவனுடைய உதவிபெற்ற குலசேகரபாண்டியன் பாண்டியஅரசனானான். மறுபடியும் பாண்டிநாட்டிற் கலகமுண்டாகவே இராஜாதிராஜனுக்குப்பின் சோழசிங்காதனமேறின குலோத்துங்கசோழன் பாண்டிநாட்டிற்புகுந்து குறும்படக்கி நாட்டிற் கலகமில்லாமற்செய்தான். அக்காலத்திலே குலோத்துங்கனுடைய படைத்தலைவனாகச் சென்றவனாகல்வேண்டும் இந்த வாணகோவரையன். இவன் அப் பாண்டிநாட்டிற் செய்த சாகசங்கள் பலவென்கல்வெட்டுக்களாற் றெரிகின்றன. அவற்றுட் சில வருமாறு:

---

1 ஆறு அகழ்களாற் சூழப்பட்டது என்று கூறும் கோவிந்தமண்டலசதக விரிவுரை. பக். 60.

மேருவின்மேல் வென்று கயல்பொறித்த வார்த்தையினும்
வாரிபட வேலெறிந்த வார்த்தையினும்—கார்விலங்கு
முன்னிட்ட வார்த்தையினும் தென்னவர் மாகதற்குப்
பின்னிட்ட வார்த்தை பெரிது.

இழைத்தபடி யிதுவோ வெங்கண வென்றென்
றழைத்த வழுகுரலே யான—தழைத்தகுடை
மன்னவர்கோன் வாணன் வடிவேலாற் றோற்றுடைந்த
தென்னவர்கோன் போன திசை.

மாலாக்கி யிந்திரை யைத்திருத் தோள்வைத்து வையமொரு
கோலாற் புரந்தருண் மாவலி வாணன்றன் கொற்றவடி
வேலாற் றுரப்புண்ட பின்வீர மாறன் வெகுண்டுபண்டு
காலாற் குடித்த கடல்கண்க ளால்விழக் கண்டனமே.

மால்விட்ட படைதுரந்து வடுகெறிந்த மகதேசன் வடிவேல் வாங்கக்
கால்விட்ட கதிர்முடிமே லிந்திரனைப் புடைத்ததுமுன் கடல்போய் வற்ற
வேல்விட்ட தொருதிறனு முகிலிட்ட தனிவிலங்கும் வெற்பி லேறச்
சேல்விட்ட பெருவலியு மாங்கேவிட் டுடனடந்தான் றென்னர் கோவே.

என்பதுபோன்ற செய்யுள்கள் பல குடுமியாமலை, பொன்னமராவதி, திருவானைக்கா, திருவண்ணாமலை, நாரத்தாம்பூண்டி முதலான இடங்களிற் காணப்படுகின்றன.

இவ்வாறு இவன் பாண்டியன்மேற்சென்றது குலோத்துங்க னுடைய ஒன்பதாம் ஆட்சியாண்டுக்குப் பின்னும் பதினொராம் ஆட்சியாண்டுக்கு முன்னும் ஆகல்வேண்டும்.[1]

வாணகோவரையன் பாண்டியனை வென்றபின்னர் வடுகரை வென்றதாகச் செய்யுள்கள் காணப்படுகின்றன. அவற்றிற் சில வருமாறு:—

முன்பொரு படைக்கடலை விட்டரச ரானோர்
மூலதன மும்பரியு முறைமுறை யளிப்பார்
தென்பகை யடக்கியபின் வாணகுல தீபன்
செய்ததனி யாண்மைவட திக்கிலதி கிற்பாம்

---

1 குலோத்துங்கனுடைய மெய்க்கீர்த்திகளிலிருந்து இது புலனாகும்.

பொன்பொரு பொருப்பரண் விடாமலைய மானைப்
பேரெயிலி லேபொருத போதொரு பெரும்போர்
வன்பகை தவிர்த்ததொரு குதிரைவலி யாலே
வடபகை தவிர்த்ததோரு கோலின்வலி யாலே.

இந்த வடுகப்போரில் வாணகோவரையனுடைய மகனும் உதவிசெய்ததாக ஒரு செய்யுள் கூறுகிறது.

மன்னுடு பூங்கழலான் வாணற் கிளங்கோமான்
அந்நாள் வடுகெறிந்த வார்வத்தால்—இன்ன
மறங்கால்வே லண்ணல் வரும்வருமென் றேங்கி
உறங்கா வடவேந்த நூர்.

இவன் வடுகர், வடவேந்தர் என்பாரோடு போர்புரிந்ததாகத் தெரிகின்றதேயன்றி அவர்கள் இவரெனத் திட்டமாகக் கூறுவதற்கில்லை. முதற்குலோத்துங்கன் விக்கிரமசோழன் இவர்களுடைய காலத்திலே வேங்கிமண்டலம் சோழராட்சிக்கு உட்பட்டதாகவிருந்தது. பின்னர் அம்மண்டலம் யாருடைய ஆட்சியிலிருந்ததென்று திட்டமாகச் சொல்லக்கூடிய ஆதாரங்கள் காணப்பட்டில. ஆயினும், இராஜாதிராஜன் மூன்றாங்குலோத்துங்கன் இவர்களுடைய ஆட்சிக்காலத்தனவாக நெல்லூரிற் சில கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. அவற்றால் அவ்வேங்கிமண்டலப்பகுதியை யாண்டவர்கள் மூன்றாங்குலோத்துங்கனுக்குக் கீழ்ப்பட்ட சிற்றரசர்களாகக் காணப்படுகின்றனர். ஆனால் அக்காலத்திலே மண்ணுசையுடையவர்கள் புதியராய்த் தோன்றிய காகதீயர்களே. அவர்களோடு ஒருக்கால் போரிட்டிருப்பினுமிருத்தல்கூடும். திட்டமாக இவர்களோடுதான் குலோத்துங்கனோ அன்றி அவனுடைய படைத்தலைவனான மாகதனோ போரிடநேர்ந்ததென்பதற்குப் போதியசான்றுகள் கிடைத்தில. என்றாலும் குலோத்துங்கசோழனுடைய போர்களில் முன்னின்றவன் மகதேசன் என்பது உறுதி.

1924-25-ஆம் ஆண்டுக் கல்வெட்டறிக்கை, மகதேசனுடைய போர்ச்செயல்களைக் குறித்துக் காணப்படுஞ் செய்யுள்களிற் சில அவன் வங்காரதுங்கன் என்பான் ஒருவனைக் கொன்றதாகக் கூறுகின்றன என்றும், இவன் பல தேர்களையுடையானென்று கூறுகின்றன என்றும் கூறுகின்றது. இச்செய்திகள் புதியனவல்ல. இவன்

மேல் பாடப்பட்ட செய்யுள்களாகத் திருவண்ணுமலையிற் காணப் படுவனவற்றுள் வங்காரதுங்கன் செய்தி கேட்கப்படுகிறது.

> கொங்கும் கலிங்கமுங் கொண்டகண் டாகொடித் தேருதியர்
> தங்கும் படிகொண்ட வாணுதி பாதணி யாததென்கொல்
> பொங்குஞ் சினப்படை வங்கார துங்கன் புரண்டுவிழச்
> செங்குன்ற மின்று பிணக்குன்ற மாக்கிய தேர்மன்னனே.

இந்த வங்காரமுத்தரையர்கள் செங்குன்றக்கோட்டத்தி லிருந்து நாடுகாவல்செய்துவந்த தலைவர்கள். இவர்களுள் ஒருவ ஞன கடந்தைச்சேந்தன் ஆதித்தனை ராஜராஜவங்காரமுத்தரை யன் திட்டைக்குடியிலுள்ள திருச்சிற்றம்பலமுடையார்க்குச் சில தானங்கள் செய்துள்ளான். இவனுடைய மகஞன ஆதித்தன் மண்டலியும் திட்டைக்குடிப் பெருமானுக்குச் சில தானங்கள் செய்தான்.[1] இந்த வங்காரமுத்தரையர்கள் குலோத்துங்கசோழ னுக்கோ அன்றி வாணகோவரையனுக்கோ துன்பங்கள் இழைத் திருக்கவேண்டும். அவற்றின் பலஞகவே இவர்கள் உயிரிழந் திருப்பர் என்று தோற்றுகிறது.

மாகதன் தனது பேரரசனேடு பகைத்தமை.

சரித்திர ஆசிரியர்கள், இராஜராஜவாணகோவரையன் தன் பேரரசஞன குலோத்துங்கசோழனேடு முரணிக் கலகஞ் செய்தா னென்று எண்ணுகின்றனர். அச்செய்தி ஆதாரமற்றது. ஆறகழூ ருடையான் பொன்பரப்பினன் ராஜராஜவாணகோவரையனும் குலோத்துங்கசோழ வாணகோவரையனும் ராஜராஜக்காடவராய னும் ஓர் ஒப்பந்தம் செய்துகொண்டிருக்கின்றனர்.[2] அதனில் பே ரரசனுக்குத் தாங்கள் கீழ்ப்படிந்துநடக்கவேண்டுமென்றும் தங்க ளுக்குள் ஒற்றுமை வேண்டுமென்றும் எழுதிக்கொண்டதாகக் காணப்படுகின்றதேயன்றி வேறுவிதமாகக் காணப்படவில்லை. ‘அக் காலத்துச் சோழசைந்நியங்களுக்கு மகாசாமந்தஞயிருந்த கிளியூர் மலையமான் பெரியவுடையானுன இராஜராஜசேதிராயன் தூண்டுத லால் பாண்டியநாடுகொண்டாஞன சம்புவராயன், செங்கேணி அத்தி

---

[1] 244A & 26 of 1903.

[2] 435 of 1913.

மல்லன், வீராண்டானான எதிரிலிசோழ சம்புவராயன், அத்தி மல்லன் பல்லவாண்டானான குலோத்துங்கசோழசம்புவராயன், கிளியூர் மலையமான் ஆகாரசூரனான இராசகம்பீர சேதியராயன், குந்தன் நம்பூரானான நீலகங்கரையன், அம்மையப்பன் மருத்தனான இராஜராஜமூவேந்தராயன், பாவந்தீர்த்தானான இராஜேந்திரசோழ சம்புவராயனான கரிகாலசோழ ஆடையூர்நாடாள்வான், சோமன் திருவண்ணாமலையுடையானான குலோத்துங்கசோழன் பிருதிவி கங்கன் என்னும் இவ்வொன்பது தலைவர்களும் சேர்ந்து மூன்றாங் குலோத்துங்கனது ஆட்சியாண்டு 27ல் கி. பி. 1205ல் ஒரு நிபந்தஞ் செய்துகொண்டனர். அதன்படி மேற்கூறிய பகைமைபாராட்டும் சிற்றரசர் மூவரும் இராஜத்துரோகிகளாகிவிட்டபடியால், அவர்களோடு தாங்கள் எதன்பொருட்டும் சேர்வதில்லையென்றும், அவர்களோடு எழுத்து முதலியன எழுதப்பெறுவென்றும் அவர்கள் பிரமாணஞ் செய்துகொண்டார்கள்' என்று எழுதியிருக்கின்றனர்.[1] குறித்த கல்வெட்டு அவ்வாறு கூறவில்லை. மேலேகாட்டிய ஒன்பதின்மரும் சேர்ந்து 'கல்வெட்டினபடியாவது: நாங்கள் ஒருகாலமும் இராஜகாரியத்துக்குத் தப்பாமே நின்று சேதிராயதேவர் அருளிச் செய்தபடி பணிசெய்யக்கடவோமாகவும். இப்படிச்செய்யும் இடத்து மகதைநாடாள்வானான வாணகோவரையனும் குலோத்துங்கசோழ வாணகோவரையனும் பக்கல் ஆளாதல் ஓலையாதல் போகக்காட்டுதல் உறவுபண்ணுதல் அறுதிசெய்தல் செய்யக்கடவோமல்லாதோமாவோம்' என்று அக்கல்வெட்டுக் கூறுகிறது.[2] மேலேகாட்டிய செய்தியில் மாகதர்கோன் இராசத்துரோகியானான் என்பதற்குரிய ஆதாரமில்லை.

இனி, இந்த மாகதர்கோனான இராஜராஜவாணகோவரையனுடைய நிலையைக் கவனிப்போம். அவன் எப்பொழுதும் தன்னை மூன்றாங்குலோத்துங்கனுக்குக் கீழ்ப்பட்டவனாகவே கூறுகிறான்.

1 திரிபுவனசக்கரவர்த்திகள் ஸ்ரீகுலோத்துங்கசோழதேவர்க்கு யாண்டு உக-வது ஆறகழூருடைய இராசராசதேவன் பொன் பரப்பினான் வாணகோவரையனேன்—M. E. R. 1902-ஆம் ஆண்டு நிர். 532

---

[1] சோழவமிசசரித்திரச்சுருக்கம் 42 43.

[2] 316 of 1902.

2 திரிபுவனசக்கரவர்த்திகள் ஸ்ரீ குலோத்துங்கதேவர்க்கு யாண்டு ௩௩-வது ஆற்றூர்க்கூற்றத்து ஆறகளூருடைய மகதேசன் இராசராசதேவன் பொன்பரப்பினுன் வாணகோவரையனேன்—M. E. R. 1902-ஆம் ஆண்டு நிர். 283.

3 திரிபுவனதேவர்க்கு யாண்டு ௩௰௫-வது ஆறகளூருடைய மகதேசன் இராசராசதேவன் பொன்பரப்பினுன் வாணகோவரையனேன்.........M. E. R. 1902-ஆம் ஆண்டு நீ 557.

இவைகளிலிருந்து வாணகோவரையன் தனது பேரரசனுன குலோத்துங்கனோடு ஒருகாலும் பகைமைபாராட்டி முரணினவனல்லன் என்பது தெளிவாகும். [உடன்படிக்கை செய்துகொண்ட ஒன்பதின்மரும் இவனது செல்வாக்கைக்கண்டு இவனிடம் பொருமைகொண்டு இவனை ஒதுக்க நினைத்திருக்கவேண்டுமென்று கொள்ளவேண்டும்.]

பொன்பரப்பின செய்தி.

இவனுடைய சாகசச் செயல்களைக்குறிக்குஞ் செய்யுள்களின் தலைப்பு, பல ஊர்களிலும் ஒருபடித்தாகப் 'பொன்பரப்பின மகதைப்பெருமாள்கவி' என்று காணப்படுகிறது. அன்றியும், இவனும் தன்னைப் 'பொன்பரப்பினுன் வாணகோவரையனே'னென்றே கூறுகின்றுன். இவன் பொன்வேய்ந்தசெய்தியைக்குறித்து ஆராய்வோமாயின் இவன் குலோத்துங்கசோழன் பட்டமெய்து முன்னரே திருவண்ணுமலையீசர்கோயிலில் பொன்வேய்ந்தான் என்ற செய்தி கேட்கப்படுகிறது. குலோத்துங்கசோழனுடைய நாலாமாட்சியாண்டில் திட்டைக்குடிக் கோயிலுக்குக் 'கடமையும் பாடிகாவலும் இறையிலியாகச் செய்வித்தான் மகதைப் பொன் பரப்பினுன் வாணகோவரையன்' என்று ஒரு கல்வெட்டுக் கூறுகிறது.[1] அவ்வாருயின் குலோத்துங்கனுடைய ஆட்சியாண்டு 35-ல் இவன் 'இற்றைநாள் பொன்வேய்ந்தபடி' சில தானங்கள் செய்தான் என்று ஒரு கல்வெட்டுக் காணப்படுகிறதேயெனின்[2] இங்குக்கண்ட பிற்றைநாளென்பது பின்னர் அவன் கொடுக்கும் தானத்தைக் குறிப்பதாகும் என்று கொள்ளவேண்டும். இவன் இஃதன்றியும், பலகோயில்களுக்கும் அனேக தான தருமங்களைச்

[1] 2413 of 1903

[2] 335 of 1902.

செய்துள்ளான்; பண்டிதரும் பாவலருமான பலரை ஆதரித்தான். இவன்மேற் பாடப்பட்ட தமிழ்ச்செய்யுட்கள் குடுமியாமலை, பொன்னமராவதி, திருவண்ணுமலை, செங்கமா, நாரத்தாம்பூண்டி முதலான விடங்களிற் காணப்படுகின்றன என்று முன்னர்க்குறிக்கப்பட்டுளது. வடமொழிச் சுலோகங்கள் திருவானைக்கா, திருவண்ணுமலை, நாரத்தாம்பூண்டி இவ்விடங்களிற் காணப்படுகின்றன. வடமொழிச் சுலோகங்களிற் சில வருமாறு:—

[illegible]
[illegible]
[illegible]
[illegible] (1)

[illegible]
[illegible]
[illegible][1]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible] (2)

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible] (3)

[1] [illegible] என்று அச்சிடப்பட்டுளது.

[இச்சுலோகங்களின் பிண்டப்பொருள் வருமாறு:—கவியரசும் காமதேனுவைப்போன்றவனுமான ஆசுகவியாம் சகலவித்தியா சக்கரவர்த்தியால் செய்யப்படும் கவிகளைக் கார்த்தவீரியார்ச்சுன னுடைய ஆயிரங்கைகளாலும் எழுதவொண்ணாது. ஆயிரவாய் களையுடைய ஆதிசேடனாலும் சொல்லவொண்ணாது(1). இந்திர னது கர்வத்தையடக்கியவனான பாண்டியன்முடிகளை முன்னர் ஐந்துதடவையும் இப்பொழுது ஒருதடவையுமாய் இந்த வாணே சன் பறித்து ஒன்றைச் சோழனுக்கு ஈந்தான். மற்றை ஐந்தையும் அருணாசலேசர்க்குக் கொடுத்தான், இவன் பிறருக்குத்தர என்ன வைத்திருக்கின்றான்(2); தனது தோள்வலியால் க்ஷத்திரியர்களை வென்று அவர்களது மூலதனத்தைக் கவர்ந்து அருணையைப் பொன்னால் மேய்ந்தான்; அதனால் உலகவிருளைநீக்கும் பரிதியே மேருமலை இந்த அருணைதானேயென மயங்கி வலம் வருகின் றான்(3).]

இவனைக்குறித்த சில கதைகள்.

ஆறைவாணன் ஏகம்பவாணன் என்றும் இவனே பாண்டிய னது வேப்பமாலையை வாங்கிவரச் சொன்னவனென்றும் மற்றும் பலவும் தொண்டைமண்டலசதகச்செய்யுள்களின் உரைகாரர் ஒரு வர் கூறுவர். தொண்டைமண்டலசதகச்செய்யுள் வருமாறு:—

> 'மீனத்தி னன்மற் றொருகோடி செம்பொன் விலைகொடுத்த
> மானத்தி னாலும் வலியதன் றேதொண்டை மண்டலமே.'

இதனுள் பாண்டியன் ஒருகோடிசெம்பொன்கொடுத்துத் தன்னை மீட்டுக்கொண்ட செய்தி கூறப்படுகிறதேயன்றி ஆறை வாணனைக் குறித்தேனும் ஏகம்பவாணனைக்குறித்தேனும் ஒன்றும் காணப்படவில்லை.

சேலம் ஜில்லாவும் ஆர்க்காடு ஜில்லாவும் சந்திக்கிற இடத்தில் ஒன்றினுள் ஒன்றாக ஆறு அகழிகளால் சூழப்பெற்றதான ஆறக பூர் மகதை மண்டலத்தின் தலைநகர். அவ்விடத்து மாவலிவாண வமிசத்தானான வாண அரசனானவன் பராக்கிரமத்தோடு ஆண்டு வந்தான். மகதம் என்னும் நடுநாட்டதிபதியானதால் மகதைப் பெருமாள் என்னும் மற்றொரு பெயரும் இவனுக்கு உண்டு.

இவன் சேர சோழ பாண்டியர்களான மூவேந்தரையும் மதிப்ப தில்லை; ஆனால் பல புலவர்களால் புகழ்ந்து பாடப்பெற்றுள்ளான். 'இவனை யாரேனும் பிடித்துத் தன்முன் அடக்கி நிறுத்துவரேல் வேண்டுவன உதவுவேன்' எனப் பாண்டியன் பறைசாற்றுவித்தான். கீழ்கரைப் பூந்துறை மோரூர்க் கன்னகுலத்தானான சூரியன் என்னும் சேனவீரவாலிபன் இதனை முடிப்பதாக முன்வந்தான். தனக்கு வேண்டிய சாதனங்களைப் பெற்றுப்போய் ஆறகழூரில் மாறுவேடம்பூண்டு உளவறிந்திருந்தான். சமயம்வாய்த்தபொழுது உடன்வந்த துணையாளர்களுடன் பல்லக்குத்தூக்கிகளாயிருந்து எடுத்தபடியே மகதையெல்லைகடந்து கொண்டுவந்துவிட்டான். இடையே வைக்கப்பட்டிருந்த பாண்டிவீரர்களும் இவனுடன் சேர்ந்துகொண்டார்கள். மலைமேற் சுற்றுக்கோட்டைகளுள்ள சங்க கிரிதுர்க்கத்திற் பாண்டியராஜன் முன்கொண்டுவந்து நிறுத்தினான். இதற்கு ஆதாரமாக

பிண்டாறை வாணனைமுன் வெட்டாமற் பாண்டியனேர்
கொண்டுவந்து நிற்கவிட்ட கொற்றவனு மீயலையோ
தெண்டிரைசேர் மோரூரிற் றென்னன்மகு டாசலனே
மண்டலிகர் தேர்ந்துமெச்ச வாழ்சூரிய காங்கயனே.

என்று ஒரு செய்யுளும் காணப்படுகிறது. இதுவன்றி,

'பூதத்துணை கொண்ட போர்வாணன் மாறனிரு
பாதத்துணை காணப் பண்ணினோர்'

என்றும் ஒரு மேற்கோள் காட்டுவர்.[1] ஆயினும் மேலே காட்டிய செய்திகளால் இவை மாகதர்கோனான இராஜராஜவாணகோவரைய னைக் குறித்த கதைகளல்ல என்பது தெளிவாம்.[2]

---

[1] கொங்குமண்டலசதகம் பக். 60.

[2] இவனைக்குறித்த செய்யுள்களெல்லாம் செந்தமிழ் மூன்றாந்தொகுதி யில் வெளிவந்துள்ளன. அங்குக் காணப்படாதனவே ஈண்டுக் குறிக்கப்பட் டன.

யவனர்வரலாறு.

[யாழ்ப்பாணம் ஸ்ரீமான். த. இராமநாதபிள்ளை B.A., (LOND.) அவர்கள்.]

(கூஅ-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

உரோமருடைய மூடநம்பிக்கை.

பண்டுதொட்டு உரோமர் முழுக்கம்பார்த்துவந்தனர். 'இரவு வில்லிடும் பகல்மீன் வீழும்' என்றவாறு பல உற்பாதங்கள் கா. யூலியஸ்கைசர் காலத்தில் நிகழ்ந்தனவென அறியக்கிடக்கின்றது. இலிவியஸ் தாம் எழுதிய உரோமர்வரலாற்றில் பல உற்பாதங்கள் நிகழ்ந்தனவெனக் கூறியுள்ளார். குருதிமழைபெய்தல், கன்மழை பொழிதல், அரிமா நகர்வீதியில் உலாவுதல், இரட்டைத்தலைப் பிள்ளைகள் பிறத்தல், அரவங்கள் ஒன்றையொன்று விழுங்குதல், உருமேறு உருமுதல், வானவர் விசும்பிற் போர்புரிதல், இரைபராறு இரத்தவெள்ளமாகப் பாய்தல் முதலியவை ஆண்டாண்டு நிகழ்ந்துழி நிகழ்ந்துழிக் கூறப்பட்டன. உற்பாதங்களுக்குச் சாந்திசெய்தல் வழக்கம். பகைவரை உயிரோடுபுதைத்தல், மக்கட்பலியிடுதல், கூத்தாடல், தெய்வங்களைப் பரவுதல், விழாக்கொண்டாடல் என்னுஞ் சாந்திகள் உரோமராற் செய்யப்பட்டன. வீயாநகரை அழித்தற்கென உரோமர் செய்த சாந்தி மிக அநாகரிகமானது; கன்னியர் இருபதின்மர் நிரைபராய், ஆடிப் பாடிக் கோயில்தோறுஞ்சென்று தேவரை இறைஞ்சிக் களித்தனரென இலிவியஸ் எழுதினர். சில தெய்வங்களின் விழாக்காலங்களில் ஆடவர் ஆடையற்றவராய்த் தெய்வமேறினோராய்த் தெருக்களில் ஓடி மலடிகளைத்தொட்டால் மலடிகளும் சூற்கொள்வாரென்பது அவர்களுடைய கொள்கை. குடியரசுக்காலத்தில் உரோமர் புண்ணிமித்தம் பார்த்தனரெனவும் அறியக்கிடக்கின்றது. எலி கீச்சிடுதல், வாசிகள் கனைத்தல், வேழங்கள் ஆர்த்தல் முதலியவை துர்நிமித்தங்கள் என மொழியப்பட்டன. தலைவர்கள் நிமித்திகரிடம் நிமித்தங்கேட்டே போருக்குப் புறப்பட்டனரெனவும் எத்தொழில்செய்யமுயலும்போதும் நிமித்த நூல்களை ஆராய்தல் வழக்கமெனவும் தெரிகின்றது.

உரோமாபுரம்.

உலகிலுள்ள பல்வேறுதேயத்தாரும் பல்வேறு வருணத்தாரும் பல்வேறுமுயற்சியாரும் உரோமாபுரத்தில் உறைந்தனர். பசிப்பிணியால் வருந்தும் கிரேக்கரும் பச்சைகுத்தும் பிரித்தானியரும் அரேபியாதேசத்து வணிகரும் ஆபிரிக்காக்காட்டுக் கரியமக்களும் கானவராகிய ஐபீரியரும் சர்மானியரும் எத்தியோப்பியரும் எகிப்தியரும் பினீசியரும் அங்காடிகளிலும் நகர்ச்சதுக்கங்களிலும் காணப்பட்டனர். கிரேக்கர் சகலகலைகளிலும் வித்தைகளிலும் பயின்று இயந்திரமியக்குதல்முதற் குற்றேவல்செய்தல் ஈறான பல்வகைத் தொழில்களாலும் பொருளீட்டினர். ஆடல் பாடல் செய்யும் கூத்தராயும் இன்னிசையிசைக்கும் பாணராயும் நாவாயோட்டல், கப்பல்கட்டல், இல்லமமைத்தல், பாலமமைத்தல், நீர்க்குழாயமைத்தல் முதலியவற்றைச் செய்யும் தொழிலாளராயும் கடுங்தேர்கடாவுநராயும் யானைப்பாகராயும் கல்லாவிளைஞரைக் கல்விபயிற்றும் உபாத்தியாயராயும் உயர்தரக்கல்விகற்பிக்கும் ஆசிரியராயும் மருத்துவராயும் கலைஞராயும் ஓவியராயும் சிற்பராயும் செங்கோலோச்சும் அமைச்சராயும் கிரேக்கர் இத்தாலிநாட்டிலும் உரோமருடைய ஆட்சிநாடுகளிலும் பொருளீட்டி வாழ்ந்தனர். உரோமாபுரம் தலைநகராகையால் பெருந்தொகையான மக்களையுடையதாயிருந்தது. பல்வகைத்தேயத்தோரும் தொழிலாளரும் ஒருங்குவதியும் நகரங்களில் தொற்றுநோய்கள் பெருகுதல் இயற்கையே. கி.மு. 23-ல் தொற்றுநோயால் உரோமாபுரத்தார் பீடிக்கப்பட்டனர். கி.பி. 65-லும் 75-லும் கொடியதோர் தொற்றுநோயால் நாடோறும் ஆயிரக்கணக்கான சனங்கள் மாண்டனர். ஔரீலியஸ் என்னும் தனிக்கோலன் காலத்தில் உரோமநாடுகளில் நாடோறும் பத்தாயிரம் மக்கள் இறந்தனரென்ப. சனங்களுக்குச் சுகாதாரமுறை தெரியாமையினாலும் நகரத்தில் வறியோர் மிகுந்தமையாலும் தெருக்கள் ஒடுங்கியவையாதலாலும் தொற்றுநோய்கள் இலகுவில் பரவின. வீதிகள் ஒடுங்கியனவாகையால் பண்டம் மாறச் செல்வோர் அபாயநிகழுமோவென அஞ்சியே சென்றனர். நாளங்

காடிகளில் காழியர் கூவியரின் இரைச்சலும் கொள்வோர் கொடுப்போரின் கம்பலையும் சகிக்கமுடியாதென்பர். இராவழிநடப்போர் இருட்டில் நடந்தனர். அப்போது உப்பரிகைகளில் வசிப்போர் குப்பைகளை வழிச்செல்வோர்மீது வீசுதலும் உண்டு. மேல்வீட்டோர் சாளரங்கள் வழியாகக் கற்களையும் ஓடுகளையும் தெருவில் தள்ளிவிடுவர்.

உரோமரின் இல்லங்கள்.

கீழ்மக்கள் சிறுகுடிசைகளில் வாழ்ந்தனர். மேன்மக்களின் இல்லங்கள் நாட்டுவீடு நகரவீடு என இருவகையவாயின. வில்லா என்னும் இல்லங்கள் செல்வர்களால் சுகத்திற்கேற்ற இடங்களில் மலைச்சாரல்களிலும் ஆற்றங்கரைகளிலும் தண்ணறுஞ்சோலைகளிலும் அமைக்கப்பட்டன. நகரவீடுகள் இரண்டடுக்குமுதல் பல மாடங்களுடையன. அவை மரத்தால் கட்டப்பட்டவையாகையால் இலகுவில் அழல்வாய்ப்பட்டன. உரோமாபுரம் நீரோகாலத்தில் தீப்பற்றியபின் கல்வீடுகள் அமைக்கப்பட்டன. இனி, நாட்டுவீடுகள் மேலடுக்கில்லாத மனைகள். அவ்வீடுகளில் நடுப்பகுதி வெளிமுற்றமாக இருக்கும். முற்றங்களில் நீர்தெளிக்கும் சிவிறிகள் அழகிய உருவினவாய் அமைக்கப்பட்டிருக்கும். சேக்கைமாடங்களும் விருந்தினரை ஓம்பும் மாடங்களும் உத்தியோகமாடங்களும் அடிசிற்சாலைகளும் ஊணருந்தும் மன்றத்தைச்சுற்றி அமைந்திருக்கும். ஊணருந்தும் மன்றத்திலே குடும்பத்தோர் யாவரும் ஒருங்குகூடியுண்பர். உண்ணுமுன் இல்லுறைதெய்வங்களுக்குச் சிறுதுளிகள் படைத்தல் வழக்கம். தொழிலாளரும் கமத்தோரும் வணிகரும் இங்ஙனம் கூடியுண்ணவில்லை.

நீராடுந் தொட்டிகள்.

அரசாங்கத்தோர் நீராடும் மாடங்களைப் பலநகரங்களில் அமைத்தனர். உரோமர் நீராடுதலில் மிகப்பிரியமுடையவர்கள். மேன்மக்கள் நீராடச்சென்றால் இரண்டுநாழிகைசெல்லும். நீராடும் மாடங்களில் சேவிக்கும் அடிமைகள் நீராடுவோரின் உடை

அணிகலன்கள் முதலியவற்றை நீக்கி ஒரு மாடத்தில் இடுவர். அடுத்தமாடத்தில் நீராடுவோர் எண்ணெய்தேய்க்கப்படுவர். பின்னர்த் தண்ணீரிலேனும் வெந்நீரிலேனும் இரண்டிலுமேனும் மூழ்கிச் செல்லுவர். மேன்மக்கள் சிலர் மெய்கழுவுதற்கும் அடிமைகளை நியமித்தனர். சில இடங்களில் நீராடுந்தொட்டிகள் பெண்களுக்கெனத் தனியாக அமைக்கப்பட்டன. மேன்மக்கள் நீராடும்தொட்டியில் கீழ்மக்கள் நீராடக்கூடாது. ஒருமுறை ஒரு தலைவன்மனைவி நீராடச்சென்று கீழ்மகன் ஒருவன் மேன்மக்களுக்குரிய தொட்டியில் நீராடுதலைக்கண்டு அவனைச் சேவகரால் அடிப்பித்தாளாம்.

உரோமரின் உணவு.

பாடசாலைக்குச் செல்லும் மாணவர் சேவல் கூவுமுன் எழுந்து காலையுணவுண்பர். பொதுமக்கள், காலையுணவைச் சூரியனுதித்து இரண்டுநாழிகை கழிந்தபின் உண்பர். ஒரு துண்டு கோதுமையப்பத்தை உப்போடேனும் தேனோடேனும் அவர்கள் உண்பர். அதனுடன் திராக்ஷாரசத்தையும் பருகுவர். கோதுமையப்பத்தை மீனோடும் கோழியிறைச்சியோடும் உண்ணுதலும் அவர்கள் வழக்கம். முக்கிய உணவை உரோமர் நண்பகலின்பின் உண்பர். பகலுணவுண்பதில் அவர்கள் இரண்டுநாழிகை கழிப்பர். ஊணருந்தும் மன்றத்திற் கட்டில்களை நிரைநிரையாக வைத்துப் படுத்திருந்தே உண்பர். ஆட்டுவெண்ணெயோடும் முட்டையோடும் உண்ணத்தொடங்கல் அவர் வழக்கம். பல்வகைச் சூட்டிறைச்சிகளை ஒன்றன்பின் ஒன்றாக அடிமைகள் ஏந்திநிற்பர். பின்னர்ச் சிற்றுண்டிகளும் பண்ணிகாரங்களும் பழங்களும் உண்ணப்படும். மேன்மக்கள் ஒவ்வொன்றையும் உண்டவுடன் விரல்களைக் கோதுமையப்பத்துண்டுகளில் துடைப்பர். அவ்வப்பத்துண்டுகள் நாய்களுக்கு உணவாகும்.

விருந்தோம்புவோர் ஒன்பதின்மரை அழைத்தல் வழக்கம். அழைக்கப்பட்டோர் தம்முடன் ஒருவரையேனும் இருவரையேனும் அழைத்துச்செல்லலாம். விருந்தினர்கள் தம் செருப்புக்களைக் களைந்தபின் உத்தரியத்தோடு சாய்ந்திருந்தே உண்பர். கரண்டி முள் என்னும் இக்கால மேனாட்டு முறையாக உரோமர் உண்ண

வில்லே என்பது கூறும்மலே அமையும். உணவு உண்டபின் விறலியர் கூத்தர் முதலியோரின் ஆடல்பாடல்களைக் கண்டுங் கேட்டுங் களிப் பர். விருந்தினர் தம் வீட்டுக்குத் திரும்பும்போது, விருந்தளித்தோ ரிடம் கையுறைபெற்றுச் செல்வர். மேன்மக்கள் தம் குடிகளுக்குக் கொடையளித்தல் வழக்கம். குடிமக்கள் இடையிடையே சென்று வணக்கஞ்செய்து பரிசில்பெறுவர். உரோமர் உண்டிசுருங்கல் அழ கென்பதைச் சிறிதும் சிந்தித்திலர். உரோமருடைய ஊணாசையைப் புலவர்கள் தம் நூல்களிற் கண்டித்தனர். கொருசியஸ், யூவினஸ் என்போர் தாமெழுதிய நூல்களிற் சிற்றின்பங்களைக் கண்டித்தனர். மேன்மக்கள் சிலேச்சுறு வொழிய வேறு சுறுவினை உண்ணார் எனவும் வளர்பிறையில் காய்க்கும் ஆப்பிளையே தேடித்திரிவரெனவும் ஆறுமாசம் ஊறிய நறவையே குடிப்பரெனவும் கொருசியஸ் கண்டித்தனன். உரோமர் அளவுகடந்து சுவையின்பம் விழைந் தனரென்பது இலக்கியங்களால் இனிதுபுலப்படுகின்றது.

விளையாட்டுக்காட்சிகள்.

உரோமர் காட்டுமிருகங்களைப் பொரவிடுதலில் இன்புற்றனர். கொலைத்தண்டம் விதிக்கப்பட்டோரை விளையாட்டுமுற்றத்தில் ஓநாய் உழுவை முதலிய காட்டுவிலங்குகளினிடையே இட்டு வேடிக்கை பார்த்தனர். உரோமர் வாட்போர்க் காட்சியிலும் இன்புற் றனர். வாட்போர்க்கழகத்தில் பயின்ற வீரர் காட்சிகாட்டற்காக, விளையாட்டுமுற்றத்தில்பொருது உயிர்நீத்தனர். ஆயிரக்கணக்கான அடிமைகள் இக்காட்சிகளுக்காக வாட்போர் பயிற்றப்பெற்றனர். ஆடவரும் மகளிரும் இத்தகைய காட்சி காணுதலில் மகிழ்ந்தனர். தனிக்கோலாட்சிக்காலத்தில் உரோமர் தேர்ப்பந்தயத்திலும் களித் தனர். தனிக்கோலர் பெருந்தொகைப்பொருள் செலவிட்டுத் தே ரோடும் வீதிகள் அமைத்துத் தேர்கடாவும் பாகரையும் பயிற்றினார் கள். அகஸ்தஸ் கட்டிய பெரிய விளையாட்டுமண்டபத்தில் ஆடவருக் கும் பெண்டிருக்கும் வரிசைவரிசையாக ஆசனம் அமைப்பித்தனன். அம்மண்டபம் ஐயாயிரம் மக்களைக் கொள்ளக்கூடியதாம். உரோமர்

நகைச்சுவை இன்பச்சுவை விரவிய நாடகங்களிலும் இன்புற்றனர் என்பது இலத்தீன் நூல்களால் வெள்ளிடைமலைபோலத் தெரிகின்றது. இக்காட்சிகளைக் காட்டற்குத் தலைவர்கள் செலவுசெய்தனர். வருடாந்தத்தேர்தலில் தெரிந்தெடுக்கப்பெறுந் தலைவர்கள் யாவரும் சனங்களின்வாக்கைப் பெறுதற்காகக் காட்சிகளை நடாத்தினார்கள். தெருச்சனங்கள் ஊணுக்காகவும் காட்சிக்காகவும் தமது தெரிவுரிமைகளை உபயோகித்தனர். தெருச்சனங்கள் தலைவராக விரும்புவோர் தேசத்தொண்டரோ அல்லரோ எனத் தெளியாமல் காட்சியளிப்போரையே தெரிந்தெடுத்தனர். இத்தகைய குடிகளுள்ளநாட்டில் குடியரசு ஒருபோதும் செங்கோலாகாது. இங்ஙனம் உரோமருடைய குடியரசு சிற்சில காலங்களில் தெருச்சனங்களின் அரசாகவும் சிலகாலங்களில் மேன்மக்களின் அரசாகவும் விருத்தியடைந்து கெட்டது. பின்னர் நிலைத்த தனிக்கோலாட்சி கொடுங்கோலாயிற்றென்பது தனிக்கோற்காலவரலாற்றைப் படிப்போர் யாவருக்கும் புலப்படும்.

உரோமருடைய வாணிகம்.

தனிக்கோற்காலத்திலே உரோமர் கீழைத்தேயத்தாரோடு வாணிகஞ்செய்யத்தொடங்கினர். யவனர் தமிழ்நாட்டில் இறங்கித் தமிழரோடு வாணிகஞ்செய்தனர் என்பது அகநானூறு புறநானூறு பத்துப்பாட்டு முதலிய சங்கநூல்களாலும் சிலப்பதிகாரத்தாலும் புலப்படுகின்றது. தமிழர் முதன்முதல் யவனரோடு பழகினராதலின் உரோமரையும் யவனரெனக் கருதியிருத்தல்கூடும். உரோமர் யவனநாடுகளிலும் எகிப்திலும் பரவியிருந்தனராதலின் இந்தியருடன் வாணிகஞ்செய்தனரென்பது மிகையாகாது. உரோமருடைய வாணிகத்தைப்பற்றி ஆசிரியர் மூத்த பிளினி (கி. பி. 70) எழுதுங்கால் உரோமர் இந்தியருக்குப் பெருந்தொகையான பொன்னைக்கொடுத்துப் பட்டாடைகளையும் மிளகு இலவங்கம் முதலியவற்றையும் முத்து இரத்தினம் முதலிய விலையுயர்ந்த பொருள்களையும் வாசனைப்பொருள்களையும் பெற்றனர் எனக் கவலைப்படு

கின்றனர். இலண்டன் பல்கலைக் கழகத்துப் பண்டைவரலாற்றாசிரியர் உவாமிங்ரன் என்பார் இலத்தின் கிரேக்கு நூல்களை ஆராய்ந்து, உரோமரும் யவனரும், சீனர் இந்தியர் என்னும் கீழைத்தேயத்தாரோடு பன்னூறாண்டுகள் வாணிகம்நடாத்தினர் எனச் செப்புகின்றனர். பெரிபுளுஸ் என்னும் நூல் எழுதிய ஆசிரியரும், உரோம ஆசிரியரான பிளினியும் உரோமர் கீழைத்தேயத்தாரோடு செய்த பண்டமாற்றைப்பற்றி விரித்தெழுதியுள்ளார்கள். இப்பாலுஸ் என்னும் யவனன் செங்கடலூடாகச் சென்று ஆராபிக்கடலிற்புக்குச் சோழகம் தென்மேற்கிலிருந்து பெயரும் பருவக்காற்றென உணர்ந்தான் என மேற்கூறிய ஆசிரியர் இருவரும் கூறுகின்றனர். செங்கடலை எரித்திரையன்கடல் என அவர் கூறினர். சோழகக்காற்றை யவனர் இப்பாலுஸ் என்னும் பெயரால் வழங்கினராம். இப்பாலுஸ் என்னும் பெயர் அராபிக்கடலையும் சுட்டிற்று.

எகிப்தியர் செங்கடற்கரையில் பெருநிசி என்னும் துறைமுகத்தை நிறுவினர். பெருநிசித்துறையிலிருந்து சேரநாட்டிலுள்ள முசிறி என்னும் பட்டினத்தை நாற்பதுநாளில் அடையலாமென்ப. கி. மு. 608-ல் எகிப்திய நேமிவேந்தனுக்குக்கீழ் நெக்கோ II என்பவன் தேசாதிபதியாயிருந்தான். அவனுடைய ஆணைப்படி எகிப்திய மாலுமி ஒருவன் ஆபிரிக்காக் கண்டத்தைச் சுற்றிக் கடற்பிரயாணம் செய்தனன் எனத் தெரிகிறது. எகிப்தியமன்னன் இராமசிஸ்II செங்கடலையும் நீலநதியையும் இணைத்தற்கென ஒரு வாய்க்கால் தோண்டினனென எகிப்திய சரித்திரம் கூறுகின்றது. யவனர் எகிப்துநாட்டைக் கைப்பற்றி யாண்டகாலத்தில் செங்கடலையும் மத்தியதரைக்கடலையும் இத்தகைய ஒரு வாய்க்காலால் இணைத்தல் அவசியமென உணர்ந்தனர். எகிப்தை ஆண்ட யவனமன்னன் தாலமி II என்பான் கி. மு. 284-ல் மேற்கூறிய வாய்க்காலைப் பின்னரும் அகழ்வித்தான். இங்ஙனம் யவனர் தம் கப்பல்களிற் புறப்பட்டு நீலநதிவழியால் வந்து வாய்க்கால்வழியாகச் செங்

கடலைச் சேர்ந்தார்கள். யவனர் செங்கடலூடாகச் சென்று பர்சிய சிரிகுடாத்துறைகளிலும் தென்னிந்தியத்துறைகளிலும் பண்டமாறி ஏகினர். நீலநதியின் வாய்க்கால் ஆயிரம் ஆண்டுகள் உபயோகிக்கப்பட்டதெனத் தெரிகிறது. உரோமாபுரத்திலிருந்து புறப்பட்டு புற்றையோலித் துறைவழியாய் நீலநதியின் முகத்துவாரத்திலுள்ள அலெச்சாந்திரியாநகரில் இறங்க, இருபதுநாட் செல்லும். அலெச்சாந்திரியாவிலிருந்து நீலநதிவழியாலோ தரைவழியாலோ சென்று செங்கடலிலுள்ள துறையாகிய பெருநிசியில் கப்பலேறி ஆடிமாசம் புறப்பட்டால் புரட்டாசியில் தமிழ்நாட்டை அடையலாம். சோழகம் நின்று வாடைதொடங்கியபின், மாலுமிகள் முசிறியிலிருந்து மார்கழிமாதம் புறப்பட்டுப் பங்குனிமாதத்தில் எகிப்தை அடைவார்கள்.

மரக்கலத்திற் செல்லும் யவனவணிகர் எத்தியோப்பியரோடும் இந்தியரோடும் பண்டமாற்றுச் செய்தனர். மெகாஸ்தனிஸ் டமாஸ்கஸ் என்னும் இருவர் பாடலிபுரத்தில் செங்கோலோச்சிய சந்திரகுப்தனுடைய அரசவையில் தூதராயிருந்தனரெனவும் சந்திரகுப்தன் பேரன் அசோகன் எகிப்துதேயத்துத் தாலமி II என்போனுக்கும் சிரியாதேசத்து அந்தியோக்கஸ் II என்போனுக்கும் தூது அனுப்பினன் எனவும் தெரிகின்றது. இந்தியநாட்டு மன்னர் ஏவிய தூதர் பலர் ஆழிவேந்தன் அகஸ்தஸைக் கண்டனர். 600 குறுநிலமன்னரை ஆண்ட பாண்டியன் ஒருவன் அகஸ்தஸுக்குத் தூது அனுப்பி அகஸ்தஸையேனும் அவனுடைய தூதரையேனும் தன்னைக் காணுமாறு வேண்டினனும். அப்பாண்டியன் கொடுத்த கையில்லாச் சிறுவனொருவனைப் பூகோளநூலாசிரியன் ஸ்திராபோ என்போன் தான் கண்டதாகக் கூறுகிறான். டையோக்கசியோ என்பானும் புளூற்றுக்கஸ் என்பானும் இந்தியாவிலிருந்து வேங்கைகள் கொடையாக அளிக்கப்பட்டன எனக் கூறுவர். ஆசிரியன் புளோறஸ் என்பான் இரத்தினங்களும் யானைத்தந்தங்களும் முத்தும் அளிக்கப்பட்டன எனக் கூறினன்.

தரைமார்க்கமாகவும் உரோமரும் யவனரும் சீனருடனும் இந்தியருடனும் வாணிகஞ்செய்தனர். லுக்கூலஸ் பம்பியஸ் என்போர் தரைமார்க்கமாகச் செய்யும் வாணிகத்தைக் காத்தற்கே சின்னாசியாநாடுகளை உரோமருடைய ஆட்சிநாடாக்கினர். காஸ்பியன் கடலிலிருந்து ஒக்சஸ் நதிவழிச் சென்று பின் தரைவழியாக ஒட்டகங்களின்மீது சென்று இந்து நதியை யடைந்து பின்னர்க் கங்கைக் கரையிலுள்ள பாடலிபுரத்தில் யவனர் வாணிகஞ்செய்தனர். யவனர் ஒக்சஸ்நதியிலிருந்து தரைவழிச்சென்று சீனதேசமடைந்து பட்டாடைகள் பெற்றுத் திரும்பினர்.

கடல்மார்க்கமாகச்செய்யும் வாணிகத்தையும் தரைமார்க்கமாகச் செய்யும் வாணிகத்தையும் காத்தற்கே அகஸ்தஸ் பாதியரோடு போர்புரிந்தனன் எனச் சரித்திரவாசிரியன் தாலமியும் ஸ்திராபோவும் உரைக்கின்றனர். யவன ஆசிரியர்கள் இலங்கையின் அளவை மிகுத்துக்கூறுகின்றனர். இலங்கை தென்னாப்பிரிக்காவோடு இணைக்கப்பட்டிருக்குமோ வென ஐயுற்றனர். செனக்கா என்பவன் இலங்கையிலிருந்து ஆபிரிக்காவைச் சுற்றி உரோமாபுரத்தை விரைந்து அடையலாமென எண்ணினன். யவனன் ஒருவன் இலங்கையில் இப்பூர் என்னும் இடத்தில் இறங்கினன் எனவும் இலங்கை மன்னன் கி. பி. 41ல் தூது அனுப்பினன் எனவும் யவனர் கூறுப. தனிக்கோலன் டொமீசியானஸ் என்பவன்காலத்திலிருந்த மாசாலிஸ், குவிந்திலியன், ஸ்ராசியஸ் என்னும் ஆசிரியர்கள் உரோமரும் யவனரும் இந்தியரோடு பண்டமாற்றினர் என நுவன்றனர். யவனர் கடற்கள்வருக்குத் தப்பிக் கலங்கரைவிளக்கங்களைக் கவனித்து முசிறியிலும் தாமிரபர்ணியின் முகத்துவாரத்தில் நிறுவப்பட்ட கொற்கையிலும் காவிரிப்பூம்பட்டினத்திலும் கருவூர் எனப்படும் வஞ்சியிலும் இறங்கினார்கள். காவிரிப்பூம்பட்டினத்தில் யவனர் இருக்கை புறம்பானதென இளங்கோவடிகள் விளம்பினர்.

யவனர் வாணிகஞ்செய்ததுமன்றி மெய்காப்பாளராக ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் முதலிய மன்னர்பால் ஊழியம் செய்தனர் எனவும் அறியக்கிடக்கின்றது. யவனர் தம் பாவை விளக்குகளை யும் குப்பியில் கொண்டுவரும் மதுவினையும் தமிழருக்கு விற்றனர். தமிழரிடம் யானைக்கொம்பு முத்து மிளகு இரத்தினம் தூசு என்ப வற்றைப் பொன்னுணயம் கொடுத்துப் பெற்றனர். ஈண்டு யவனரைப்பற்றித் தமிழ்நூல்கள் கூறும் செய்திகளுட் சிலவற்றைக் குறித்தல் ஏற்புடைத்தாம். அவை:—

"சேரலர்
சுள்ளியம் பேரியாற்று வெண்ணுரை கலங்க
யவனர் தந்த வினைமா ணன்கலம்
பொன்னொடு வந்து கறியொடு பெயரும்
வளங்கெழு முசிறி யார்ப்பெழ வளைஇ
அருஞ்சமங் கடந்து படிமம் வவ்விய
நெடுநல் யானை யடுபோர்ச் செழியன்" (அகம். 149)

"கலந்தந்த பொற்பரிசம்
கழித்தோணியாற் கரைசேர்க்குந்து;
மலைத்தாரமும் கடற்றாரமும்
தலைப்பெய்து வருநர்க்கீயும்
புனலங்கள்ளின் பொலந்தார்க் குட்டுவன்
முழங்குகடன் முழவின் முசிறி யன்ன" (புறம். 344)

"யவன ரியற்றிய வினைமாண் பாவை
கையேந் தையக னிறைய நெய்சொரிந்து" (நெடுநல்வாடை)

"யவனர்
நன்கலந் தந்த தண்கமழ் தேறல்
பொன்செய் புனைகலத் தேந்தி நாளு
மொண்டொடி மகளிர் மடுப்ப" (புறம். 56)

என்பனவாம்.

இனி உரோமநாவலன் கொருசியஸ் என்பான் இந்தியத்தூதர், அகஸ்தஸை கி. மு. 25லும் கி. மு. 17லும் கண்டார்கள் எனக் கூறுகிறுன். உரோமர் சேரநாட்டில் கறிமூடைகள் ஏற்றிஞர்கள் எனவும் முசிறி என்னும் பட்டினத்தில் அகஸ்தஸுக்குக் கோயில் கட்டிஞர்களெனவும் தெரிகிறது. இலங்கையிலிருந்து முத்தும் இரத்தினமும் யானைக்கொம்பும் சங்கும் ஏற்றப்பட்டன. இவ்வாணிகம் முறையே யவனராலும் உரோமராலும் யூதராலும் அராபியராலும் நடத்தப்பெற்றது.

தென்னிந்தியநாணயங்கள் உரோமநாடுகளில் கிடைக்கப் பெருமையால் தமிழர் உரோமரிடம் பெரும்பாலும் பண்டம் வாங்கவில்லை என ஊகிக்கப்படுகின்றது. உரோமருடைய நாணயங்கள் தமிழ்நாடுகளில் கிடைப்பனவாகையால் உரோமர் தமிழரிடம் பண்டம் வாங்கிஞரெனக் கருதப்படுகின்றது. குடியரசுக்காலத்தவரான உரோமருடைய நாணயங்கள் வடமேற்கு இந்தியாவில் அகப்பட்டன. அகஸ்தஸ்முதல் நீரோ ஈறுன தனிக்கோலருடைய தங்கநாணயங்கள் தமிழ்நாட்டிற் பலவிடங்களில் ஆராய்ச்சிவல்லோரால் கண்டெடுக்கப்பட்டன. தனிக்கோலர் இரைபீறியன், காயஸ், நீரோ என்போரின் இலச்சினை பதிக்கப்பெற்ற நாணயங்கள் கோயமுத்தூரில் கண்டெடுக்கப்பட்டன. இரைபீறியஸின் நாணயங்கள் 1007 கிடைத்தன. அகஸ்தஸின் நாணயங்கள் 453 கிடைத்தன. இலங்கையில் எடுக்கப்பட்ட நாணயங்கள் கி. மு. 3-ஆம் நூற்றுண்டுமுதல் கி. பி. 5-ஆம் நூற்றுண்டுவரை அச்சிடப்பட்டவை.

மாக்கஸ் ஒளரீலியஸ்காலந்தொட்டு உரோமர் தமிழரோடு செய்த வாணிகம் குன்றியதெனக் கருதப்படுகிறது. பிற்காலத்துத் தனிக்கோலருடைய நாணயங்கள் தமிழ்நாடுகளில் கிடைக்கவில்லை. தொற்றுநோயால் உரோமர் பீடிக்கப்பட்டமையாலும்

கிறித்தவர் முத்து வைரம் பட்டு முதலியவற்றை அணிதலைக் கண்டித்தமையாலும் உரோமர் வாணிகம் குன்றியதெனலாம். உரோமர் பின்வரும் பண்டங்களுக்குச் சுங்கம்பெற்றனரெனக்கூறப் படுகிறது. அப்பண்டங்கள் பெரும்பாலும் தமிழ்நாடுகளிலிருந்து மேலைத்தேயங்களுக்கு ஏற்றப்பட்டன. சிங்கம், காண்டாமிருகம், கிளி, மயில், பாம்பு, மூலிகைகள், மிளகு, இஞ்சி, எண்ணெய், அரிசி, பருத்தி, நுண்ணிய ஆடைகள், வைரம் இரத்தினம், ஆமையோடு, சாயம், சந்தனம், வாசனைப்பொருள்கள் என்பவை தமிழ்நாட்டுத் துறைமுகங்களிலிருந்து மேனாடுகளுக்கு ஏற்றுமதிசெய்யப்பட்டன.

அரிசி, இஞ்சி, என்னும் மொழிகள் இலத்தின்மொழியிலும் யவனமொழியிலும் வழங்கப்படுதல் ஈண்டு நோக்கற்பாலது. கருங்கறி வெண்கறி நெடுங்கறி என்னும் மூன்றுவகை மிளகும் ஏற்றுமதி செய்யப்பட்டன. கொத்தர்வேந்தன் அலாறிக்கு என்பான் உரோமரிடம் பொன்னும் 3000 மூடை மிளகும் திறையாகப் பெற்றான். மிளகு சுரநோய்க்கு மருந்தெனவும் இத்தாலியிற் பயிரிடப்பட்ட மிளகு காரமில்லாததெனவும் பிளினி கூறுகின்றார். இலங்கையிலிருந்து கிராம்பு, இரத்தினம், சங்கு, மல்லி, எண்ணெய், தேன், தேங்காய், சருக்கரை, பாக்கு முதலியன ஏற்றுமதியாயின எனத் தெரிகிறது. இதுகாறும் பண்டைக்காலத்திற் கீழைத்தேயத்தாருக்கும் மேனாட்டாருக்குமிடையில் நடந்த வாணிகவரலாறு சுருக்கிக்கூறப்பட்டது.

[தொடரும்.]

மதுரைத்தமிழ்ச்சங்கத்து

1937-ஆம் ஞு ஜூலைமாத வரவு செலவு கணக்கு.

விவரம்.		வரவு 1937 ஜூலை	வரவு 1936 ஜூலை	விவரம்	செலவு 1937 ஜூலை	செலவு 1936 ஜூலை
I GENERAL SECTION:				I GENERAL SECTION:		
(1) மாதச்சந்தா வகையில் அடியிற்கண்டபடி வரவு:—				(1) சங்கம் மானேஜ்மெண்டா பீஸ் சிப்பந்திகளுக்குச் சம்பளம் செல்லாக்கியது ...	153	
a. புதுக்கோட்டை ஸ்டேட்டிலிருந்து 1937-ஆம் ஞு ஜூலை மாதச்சந்தா ரூ	50			(2) சங்கக்கலாசாலை உபாத்தியாயர்களுக்குச் சம்பளம் செல்லாக்கியது ...	135 1 4	
b. மகா-ள-ள-ஸ்ரீ E. M. கோபாலகிருஷ்ணக்கோனாரவர்களிடமிருந்து 1937-ஆம் ஜூலை மாதச்சந்தா ரூ	10			(3) சங்கக்கலாசாலை மாணவர்களுக்குப் போஷணைக்காகச் செல்லாக்கியது. ...	78 ... 7	
c. மகா-ள-ள-ஸ்ரீ திரு. நாராயணையங்காரவர்களிடமிருந்து 1937-ஆம் ஞு ஜனவரி மாதச்சந்தா ரூ	10			(4) Stationery contingencies வகையிற்செலவு ...	2 ... 9	
ஆக ரூ	70	70		(5) பாண்டியன் புத்தகசாலைக்கு வரும் பத்திரிகைக்குச் சந்தா செல்லாக்கியது. ...	7 2 ...	

ஆகமொத்தம் வரவு ரூ ...	25654	6	4	2211	1	6	ஆக மொத்தம் செலவு ரூ ...	25773	12	...	854	8	1
மாத ஆரம்பத்திலிருந்த கையிருப்பு ரூ ...	578	3	9	449	5	10	மாத முடிவில் மீதி இருப்பு ரூ ...	*458	14	1	1805	15	3
ஆகமொத்தம் ரூ ...	26232	10	1	2660	7	4	ஆகமொத்தம் ரூ ...	26232	10	1	2660	7	4

*By M. R. C. C. Bank Pass Book in current account Rs. 375– 0– 0
Amounts under suspense account as per vouchers from staff 30– 0– 0
Cash on hand Rs. 53–14– 1

458–14– 1

குறிப்பு:–மேலேகண்ட விவரப்படி இம்மாதமுடிவில் மீதி இருப்பு ரூ. 458-14-1 தவிர, ஆபீஸ் மூலதனங்களாக உள்ளவை:—மதுரை M. R. C. C. Bankல் வட்டிக்கான Fixed Depositல் வைக்கப்பட்டுள்ள மூலதனங்கள் (1) ரூ. 25011-5-0; (2) ரூ. 1050-0-0; (3) ரூ. 1001; மதுரை இந்தியன்பாங்கில் வட்டிக்கான Fixed Depositல் வைக்கப்பட்டுள்ள மூலதனங்கள் (1) ரூ. 10000; (2) ரூ. 10000; (3) ரூ. 5000; காரைக்குடி மகா-ள-ள-ஸ்ரீ ஸ. லெ. ராம. ராமநாதன்செட்டியாரவர்கள் ரங்கூன் அயமேன் கடையில் வட்டிக்குகொடுக்கப்பட்டுள்ள மூலதனம் ரூ. 1,200 ஆகும்.

Audited and found correct,
V. S. RAMASWAMI, AUDITOR, 7—8—'37.

LAKSHMINARAYANAN,
MANAGER, 5—8—'37.

மதுரைத்தமிழ்ச்சங்கத்து

1937-ஆம் வருஷம் ஆகஸ்டுமாத வரவு செலவு கணக்கு.

விவரம்	வரவு 1937 ஆகஸ்டு	வரவு 1936 ஆகஸ்டு	விவரம்	செலவு 1937 ஆகஸ்டு	செலவு 1936 ஆகஸ்டு
I GENERAL SECTION :			I GENERAL SECTION :		
(1) மகா-ா-ா-ஸ்ரீ T. C. ஸ்ரீநிவாஸையங்காரவர்களிடமிருந்து நன்கொடை வரவு	3		(1) சங்கம்மானேஜ்மெண்டாபீஸ் சிப்பந்திகட்குச் சம்பளம் செல்லாக்கியது ...	125 8 ...	
(2) மாதச்சந்தாவகையில் அடியிற்கண்டபடி வரவு:—			(2) சங்கக்கலாசாலை உபாத்தியாயர்கட்குச் சம்பளம் செல்லாக்கியது ...	139 1 9	
a. புதுக்கோட்டை ஸ்டேட்டிலிருந்து 1937-ஆம் வருஷம் ஆகஸ்டு மாதச்சந்தா வரவு ரூ 50			(3) சங்கக்கலாசாலை மாணவர்களுக்குப் போஷணைக்காகச் செல்லாக்கியது. ...	182 5 6	

b. மதுரை மகா-ள-ள-ஸ்ரீ E. M. கோபாலகிருஷ்ணக்கோனாரவர்களிடமிருந்து 1937-ம் ௵ ஆகஸ்டு மாதச்சந்தா வரவு ரூ 10						
c. செந்தமிழ்ப்பத்திராசிரியர் மகா-ள-ள-ஸ்ரீ திரு. நாராயணையங்காரவர்களிடமிருந்து 1937-ம் ௵ பிப்ரவரி மாதச்சந்தா வரவு ரூ 10						
ஆக ரூ 70	70	...	...			
(3) பாங்கில் போடப்பட்டுள்ள தொகைக்கு வட்டிவகையில் வரவு ...	469	2	9			
(4) சங்கக் காலியிடத்துக்கு மாத வாடகை வரவு ...	30	...	...			
(5) Miscellaneous வரவு ...	1	1	...			
மொத்தம் ரூ ...	573	3	9	560	10	9

(4) Stationery, contingencies வகையிற் செலவு ...	7	...	...			
(5) தபால், தந்தி வகையிற்செலவு	12	...	...			
மொத்தம் ரூ	465	15	3	488	12	3

II Editorial Section :						
(1) 'செந்தமிழ்'ப்பத்திரிகைக்குச் சந்தாவகையில் வரவு ...	8	...	...			
(2) சங்கப்பதிப்புப் புத்தகங்கள் விற்றவகையில் வரவு ...	36	15	6			
(3 செந்தமிழ்ப் பழையபிரதிகள் விற்றவகையில் வரவு. ...	11	1	...			
மொத்தம் ரூ ...	56	...	6	39	12	9
III Press Section :						
(1) சங்கவேலைகள் சம்பந்தமாக அச்சுக்கூலி வகையில் வரவு.	87	...	...			
(2) ஷை வேலைகள் சம்பந்தமாக பைண்டிங்கூலி வகையில் வரவு ...	3	...	...			
மொத்தம் ரூ ...	90	...	...	94	...	...

II Editorial Section:						
(1) ஷை ஆபீஸ் சிப்பந்திகட்குச் சம்பளம் செல்லாக்கியது ...	96	11	...			
(2) சங்கப்பதிப்புப்புத்தகங்கள் அச்சிடும் சம்பந்தமாக அச்சுக்கூலி பைண்டிங்கூலி வகையிற் செலவு	90	...	...			
(3) தபால் தந்திவகையிற் செலவு	9	...	...			
மொத்தம் ரூ ...	195	11	...	271	6	...
III Press Section :						
(1) அச்சாபீஸ்சிப்பந்திகளுக்குச் சம்பளம் செல்லாக்கியது ...	45	4	4			
(2) ஷை ஆபீஸ் Stationery Contingencies வகையிற் செலவு.	6	11	6			
மொத்தம் ரூ ...	51	15	10	49	...	[illegible]

ஆகமொத்தம் வரவு ரூ. ...	719	4	3	694	7	6	ஆக மொத்தம் செலவு ரூ.	713	10	1	809	2	4
மாத ஆரம்பத்திலிருந்த கையிருப்பு ரூ. ..	458	14	1	1805	15	3	மாதமுடிவில் மீதியிருப்பு ரூ. ...	*464	8	3	1691	4	5
ஆக மொத்தம் ரூ. ...	1178	2	4	2500	6	9	ஆக மொத்தம் ரூ. ...	1178	2	4	2500	6	9

*By M. R. C. C. Bank Pass Bk. in current account Rs. 375– 0– 0
Amounts under suspense account as per vouchers from staff 77– 0– 0
Cash on hand Rs. 12– 8– 3
464– 8– 3

குறிப்பு:—மேலேகண்ட விவரப்படி இம்மாதமுடிவில் மீதி இருப்பு ரூ. 464—8—3 தவிர, ஆபீஸ் மூலதனங்களாக உள்ளவை:—மதுரை M. R. C. C. Bankல் வட்டிக்கார Fixed Depositல் வைக்கப்பட்டுள்ள மூலதனங்கள் (1) ரூ. 25011-5-0, (2) ரூ. 1050, (3) ரூ. 1001; மதுரை இந்தியன்பாங்கில் வட்டிக்கார Fixed Depositல் வைக்கப்பட்டுள்ள மூலதனங்கள் (1) ரூ. 10000, (2) ரூ. 10000, (3) ரூ. 5000, காரைக்குடி மகா-ள-ள-ஸ்ரீ கா. சுப. ராம. நாராயணன்செட்டியாரவர்களின் ரக்ஷன் அம்மன் கடையில் வட்டிக்குச் சேர்க்கப்பட்டுள்ள மூலதனம் ரூ. 1200 ஆகும்.

Audited and found correct,
V. S. RAMASWAMI, AUDITOR, 7—9—'37.

LAKSHMINARAYANAN,
MANAGER, 7—9—'37.